




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








புதன் ❖ ஜூலை. 02, 2025 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 10 ❖ இதழ் 272 ❖ ரூ.10


## அஜித்குமார் கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி முதல்வர் ஸ்டாலின்

# உத்தரவு

## விசாரணையின் போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் அவரது மரணத்துக்குக் காரணம் என்பதை அறிந்ததும் நான் மிகவும் வேதனையடைந்தேன்





சென்னை : ஜூலை. 2

**"அஜித்குமார் கொலை வழக்கில் காவல் துறையைச் சேர்ந்த 5 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கின் விசாரணை குறித்து, எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சிபிஐ-க்கு மாற்றிடுமாறு உத்தரவிட்டுள்ளேன். சிபிஐ விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை தமிழக அரசு வழங்கும்" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: 'சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில், கடந்த ஜூன் 28-ம் தேதி அன்று வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் என்பவர், திருப்புவனம் காவல் நிலையத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். விசாரணையின் போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் அவரது மரணத்துக்குக் காரணம் என்பதை அறிந்ததும் நான் மிகவும் வேதனையடைந்தேன். இது யாராலும் நியாயப்படுத்தப்பட முடியாத, காரணம் சொல்லித் தப்பிக்க முடியாத செயல்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாகச் சம்பவம் நடந்த அன்றே பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைகளின்படி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. நேற்றைய தினம், 5 காவலர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணை சிபிசிஐடி பிரிவுக்கும் மாற்றப்பட்டது. இன்று சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். துணைக் கண்காணிப்பளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்படி சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

துயர மரணத்தை அடைந்துள்ள அஜித்குமாரின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு நான் பேசினேன். நடைபெற்ற துயரச் சம்பவத்துக்கு எனது வருத்தத்தை அவர்களிடம் தெரிவித்தேன். நியாயமான, ஒளிவுமறைவற்ற, எவ்வித பாரபட்சமுமற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும், இந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அஜித்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு நியாயம் கிடைத்திட வழிவகை செய்யப்படும் என்றும் உறுதியளித்துள்ளேன்.

சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, இவ்வழக்கில் சிபிசிஐடி தனது விசாரணையைத் தொடரலாம் எனவும் தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்தச் சம்பவத்தில் காவல் துறையைச் சேர்ந்த ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கின் விசாரணை குறித்து, எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றிடுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். சிபிஐ விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை தமிழக அரசு வழங்கும்.

காவல் துறையினர் தங்களது விசாரணையின்போது மனித உரிமையைக் காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். இதுபோன்ற மீறல் சம்பவங்களை நான் எப்போதும் ஏற்றுக்கொள்வது இல்லை. திருப்புவனத்தில் சில காவலர்கள் செய்த செயல், மன்னிக்க முடியாதது. இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது என்பதை எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன்.

தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திடும் என நம்பி காவல் துறையை நாடி வரும் பொதுமக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிடும் வகையில் காவல்துறை எப்போதும் செயல்பட வேண்டும்," என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

உயர் நீதிமன்றம் அதிருப்தி: முன்னதாக, காவலாளி அஜித்குமார் கொலைதொடர்பானவழக்கின் விசாரணையின்போது, நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியமன், ஏ.டி. மரியகிளாட் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மதுரை அமர்வு, "அரசின் நடவடிக்கை போதாது. நாகரிக உலகில் வாழ்கிறோம். இதுபோன்ற செயல்களை அனுமதிக்க முடியாது. வட மாநிலங்களில் கல்வியறிவு குறைவு. அங்கு எதிர்பார்க்கலாம். தமிழ்நாடு அப்படியில்லை. அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறது. இதனால், இதுபோன்ற செயல்களை அனுமதிக்க முடியாது. அனுமதிப்பது ஆபத்தை விளைவிக்கும்.

காவல் நிலையத்தில் வைத்து தாக்கப்படவில்லை. அங்குள்ள சிசிடிவி பதிவுகள் இல்லை. கோயிலில் வைத்துத் தாக்கியுள்ளனர். அங்கு சிசிடிவி பதிவு இல்லை. இந்தப் பதிவுதான் முக்கியம். அது இல்லாததை வைத்து குற்றவாளிகளுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்துவிடுவீர்கள். பணியிடை நீக்கம் ரத்தாகும். ரிட் மனுத் தாக்கல் செய்து பணித் தொடர்ச்சி பெறுவார்கள். பணப்பலன்கள் அனைத்தும் கிடைத்துவிடும். உயிர் போனது போனதுதான்" என்றது கவனிக்கத்தக்கது.

முன்னதாக, அரசுத் தரப்பில், "வழக்கை சிபிஐ-க்கு மாற்றுவதாக இருந்தாலும் எந்த ஆட்சேபனையும் இல்லை. தவறு செய்தோர் தண்டிக்கப்பட வேண்டும். அரசு இந்த விஷயத்தில் நேர்மையாக உள்ளது. யாருக்கும் சாதகமாக இல்லை என்பதை வெளிப்படுத்தவே இதைக் கூறுகிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து நீதிபதிகள், "சிபிஐக்கு மாற்றுவது தொடர்பாக எழுத்துபூர்வமாக மனுத் தாக்கல் செய்யுங்கள். அதன் பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்றனர்.

அப்போது மனுதாரர் தரப்பில், "சிபிஐக்கு மாற்றினால் விசாரணை தாமதமாகும். ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு வழக்கில் விசாரணை இன்னும் முடியவில்லை" எனக் கூறப்பட்டது. பின்னர் நீதிபதிகள், "அதனால்தான் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் சிறப்புப் படை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது" என்றது குறிப்பிடத்தக்கது.



நேற்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம்" திட்ட தொடக்க விழாவில், "நான் முதல்வன்" கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர் உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், இ - சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உள்னி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் பார்வையிட்டார்







**புதுக்கோட்டை : ஜூலை. 2**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் நேற்று நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட் டோர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது; புதுக்கோட்டை மாவட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ விபத்தில், இப்பகுதிகளில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பட்டுள்ள தீ அடுத்தடுத்து பரவி 7 வீடுகள் எரிந்து சேதமடைந்துள்ளன. இந்த தீ விபத்தின்போது ஏற்பட்டிருந்த தீ முழுவதும், தீயணைப்புத் துறையின் மூலம் அணைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலுப்பூர் வட்டம், மெய்வழிச் சாலை, ஆர்ச் அருகில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகள் ஆகியவை நேற்றையதினம் நேரில் பார்வையிடப்பட்டது. இந்த தீ விபத்தின் மூலம் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்த நபர்களிடம் நேரில் சந்தித்து, ஆறுதல்கூறி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

மேலும், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு,உரிய அனைத்து உதவிகளையும் ஏற்படுத்தி கொடுத்திட தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என்று இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, வட்டாட்சியர் காமராஜு மற்றும் சந்திரன், பழனியப்பன், மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## மின்கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும் : அன்புமணி வலியுறுத்தல்



சென்னை : ஜூலை. 2

மக்களைப் பாதிக்கும் மின்கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும். இல்லாவிட்டால், வரும் தேர்தலில் திமுகவுக்கு மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவார்கள் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் மின்கட்டணம் உயர்த்தப்படாது என்று நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை வரை கூறி வந்த தமிழக அரசு, நேற்று முன்தினம் திங்கள்கிழமை நள்ளிரவில் மின்சாரக் கட்டணத்தை 3.16% உயர்த்தியிருக்கிறது. ஏழை மற்றும் நடுத்தர மக்களையும், தொழில் வணிகத்துறையினரையும் மிகக் கடுமையாக பாதிக்கும் வகையிலான இந்த மின்கட்டண உயர்வு கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

கிட்டத்தட்ட ரூ.3500 கோடி அளவுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கும் திமுக அரசு, வீடுகளுக்கான மின்கட்டண உயர்வு ரூ.374 கோடியை மட்டும் தாங்களே ஏற்றுக் கொள்வதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது என்று நாடகம் நடத்துகிறது. கடந்த ஆண்டு வீடுகளுக்கான மின் கட்டணத்தையும் 4.83% உயர்த்திய தமிழக அரசு, அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் வருவதால் தான் அதையும் விட்டு வைத்திருக்கிறது.

வீடுகளுக்கான மின் கட்டண உயர்வை அரசே ஏற்றுக் கொண்டதால் மக்களுக்கு பாதிப்பு இல்லை என்று கூறுவது அபத்தமான வாதம் ஆகும். கடைகள், வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து மின் இணைப்புகளுக்கும் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதால், அத்தியாவசியப் பொருள்களின் விலை கணிசமாக உயரும். அந்த சுமை அப்பாவி மக்களின் தலையில் தான் சுமத்தப்படும்.

கடைகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு ஏற்கனவே 3 முறை மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டதால் அவற்றின் செலவு மிகக் கடுமையாக அதிகரித்திருக்கிறது. ஏராளமான சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மின் கட்டணம் செலுத்த முடியாமல் மூடப்பட்டு விட்டன.

கடந்த காலங்களில் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தையே குறைக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வரும் நிலையில், இரக்கமே இல்லாமல் மீண்டும் ஒருமுறை மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருப்பதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மூடத் துடிக்கிறது திராவிட மாடல் அரசு. மருந்துக்குக் கூட மனிதநேயமும், இரக்கமும் இல்லாமல் கொடுங்கோல் ஆட்சியை மு.க.ஸ்டாலின் நடத்தி வருகிறார் என்பதற்கு இந்த மின்கட்டண உயர்வு தான் சான்றாகும். மக்களைப் பாதிக்கும் இந்த மின்கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும். இல்லாவிட்டால், வரும் தேர்தலில் திமுகவுக்கு மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவார்கள் என்று அன்புமணி தெரிவித்துள்ளார்.

## ஜிஎஸ்டியால் 8 ஆண்டுகளில் 18 லட்சம் நிறுவனங்கள் மூடல் : ராகுல் காந்தி



புதுடெல்லி : ஜூலை. 2

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்ட 8 ஆண்டுகளில் 18 லட்சத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜிஎஸ்டி அறிமுகம் செய்யப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை ஒட்டி காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, ஜிஎஸ்டி அமலாக்கப்பட்ட விதத்தைக்கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். ஜிஎஸ்டி வரி விதிப்பு அமலாக்கப்பட்ட விதத்தால், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், கார்பரேட் நிறுவனங்களே பலனடைந்து வருவதாகவும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள பதிவில், "ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. மோடி அரசாங்கத்தின் ஜிஎஸ்டி, வரி சீர்திருத்தம் அல்ல. இது, பொருளாதார அநீதிக்கும், பெருநிறுவனங்களுடனான கூட்டணிக்குமான ஒரு மிருகத்தனமான கருவி. ஏழைகளைத் தண்டிக்கவும், எம்எஸ்எம்இக்களை நசுக்கவும், மாநிலங்களை குறைமதிப்புக்கு உட்படுத்தவும், பிரதமருக்கு வேண்டிய சில தொழிலதிபர் நண்பர்களுக்கு உதவவும் ஏற்ற வகையில் இது வடிவமைக்கப்பட்டது.

"நல்ல மற்றும் எளிமையான வரி" என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இந்தியாவுக்கு கிடைத்ததோ, ஐந்து அடுக்கு வரி. அதுவும்கூட, 900 முறைக்கும் மேல் திருத்தப்பட்டுள்ளது. கேரமல் பாப்கார்ன் மற்றும் கிரீம் பன்கள் கூட அதன் குழப்ப வலையில் சிக்கியுள்ளன.

என்னதான் பட்டய கணக்காளர் படைகள் நுணுக்கமாக செயல்பட்டாலும், அதையும் கடந்து பெரு நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய ஓட்டைகளை அதிகார வர்க்கம் உருவாக்கி வைத்திருக்கிறது. அதே நேரத்தில் சிறு கடைக்காரர்கள், எம்எஸ்எம்இக்கள் மற்றும் சாதாரண வர்த்தகர்கள் சிவப்பு நாடாக்களில் மூழ்கியுள்ளனர். தினமும் அவர்களை துன்புறுத்தும் ஒரு கருவியாக ஜிஎஸ்டி போர்டல் உள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய வேலை வழங்குநர்களான எம்எஸ்எம்இக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து 18 லட்சத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன.

குடிமக்கள் இப்போது தேநீர் முதல் சுகாதார காப்பீடு வரை அனைத்துக்கும் ஜிஎஸ்டி செலுத்துகிறார்கள், அதே நேரத்தில் கார்ப்பரேட்டுகள் ஆண்டுதோறும் ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் வரிச் சலுகைகளை அனுபவிக்கின்றன.

பெட்ரோல் மற்றும் டீசல் வேண்டுமென்றே ஜிஎஸ்டி கட்டமைப்பிற்கு வெளியே வைக்கப்பட்டுள்ளன, இதனால் விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள் மற்றும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பாஜக அல்லாத ஆளும் மாநிலங்களைத் தண்டிக்க ஜிஎஸ்டி நிலுவைத் தொகைகள் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது மோடி அரசாங்கத்தின் கூட்டாட்சி எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலுக்கு தெளிவான சான்றாகும். இந்தியாவின் சந்தைகளை ஒன்றிணைத்து வரிவிதிப்பதை எளிமைப்படுத்தும் நோக்கில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் தொலைநோக்கு யோசனையாக ஜிஎஸ்டி இருந்தது. ஆனால் அதன் வாக்குறுதி, மோசமான செயல்படுத்தல், அரசியல் சார்பு மற்றும் அதிகாரத்துவ அத்துமீறல் ஆகியவற்றால் ஏமாற்றப்பட்டுள்ளது. மக்களுக்கு முன்னுரிமை, வணிக நட்பு மற்றும் உண்மையிலேயே கூட்டாட்சி மனப்பான்மை கொண்டதாக ஜிஎஸ்டி இருக்க வேண்டும். அதற்கேற்ப சீர்திருத்தம் இருக்க வேண்டும்.

அனைவருக்கும் பயனுள்ள வரி முறையை இந்தியா பெற வேண்டும். சலுகை பெற்ற சிலருக்கானதாக அது இருக்கக்கூடாது. அப்போதுதான், சிறு கடைக்காரர் முதல் விவசாயி வரை ஒவ்வொரு இந்தியரும் நமது நாட்டின் முன்னேற்றத்தின் பங்குதாரராக இருக்க முடியும்" என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

## தவெக கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை கோரிய வழக்கில் நாளை தீர்ப்பு

சென்னை : ஜூலை. 2

தவெக கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடை விதிக்கக்கோரி பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு மீது நாளை (ஜூலை 3ம் தேதி) உத்தரவு பிறப்பிக்கப்படும் என சென்னை உரிமையியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில பொதுச் செயலாளரான பெரியார் அன்பன் என்ற இளங்கோவன் சென்னை பெருநகர முதலாவது உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சியான எங்களுக்கு யானை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. எங்களுக்கான யானை சின்னத்தை வேறு எந்தக் கட்சியும் பயன்படுத்த முடியாது. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, நடிகர் விஜய்யின் தவெக கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்தக் கூடாது என தடை விதிக்க வேண்டும்," எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பி.சந்திரசேகரன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தவெக சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண், "பகுஜன் சமாஜ் கட்சியின் இந்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல. இந்த விவகாரத்தில் தங்களுக்கு சாதகமாக ஏற்கெனவே தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தவெக கொடிக்கும், பகுஜன் சமாஜ் கட்சியின் கொடிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதைப் பார்த்தாலே தெரியும். விளம்பர நோக்கத்துக்காகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது," என்று தெரிவித்தார். இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, பகுஜன் சமாஜ் கட்சி தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு மீது நாளை உத்தரவு பிறப்பிக்கப்படும் என நீதிபதி தெரிவித்தார்.

# இன்று




2-7-2025

கடமுகூர்த்தம் | தேவமாதா காட்சியருளிய தினம்

உத்தராயணம் - சக வருடம் 1947 ஆஷாடம் 11

சிறுவாபுரி முருகன் கோயில் : சொந்த வீடு கனவு நிறைவேறும்.

| | | | |
|---|---|---|---|
| விசுவாவசு ஆனி 18 | JUL - WED புதன் | முஹர்ரம் 6 | இராசிபலன் |
| | | வளர்பிறை 183 / 182 | |

வளர். ஸப்தமி 22.34 (ம. 02.59) உத்திரம் 20.59 (ம. 02.21) தியாஜ் 43.57 அமிர்த 20.59 மேல் மரண. கடமுகூர்த்தம். ஆனி உத்திர தரிசனம். தேவமாதா காட்சியருளிய நாள். நடராஜர் அபிஷேகம். ராமநாதபுரம் கோதண்டராமசுவாமி திருக்கல்யாணம் வைபவம்.

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 10.45-11.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; மிதுன லக்னம் இருப்பு நா. 2 வி. 28; சந்திராஷ்டமம் அவிட்டம் சதயம்; கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 5.57

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

இராசிபலன்: மேஷம் - வெற்றி; ரிஷபம் - போட்டி; மிதுனம் - அமைதி; கடகம் - தெளிவு; சிம்மம் - எதிர்ப்பு; கன்னி - ஏமாற்றம்; துலாம் - நட்பு; விருச்சி - கவனம்; தனுசு - லாபம்; மகரம் - நலம்; கும்பம் - வரவு; மீனம் - சுகம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்






| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 9,020 | Rs.9,840 |

# 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி புதுச்சேரியில் ஜூலை 9 தொழிற்சங்கங்கள் பந்த்

புதுச்சேரி : ஜூலை. 2

புதுச்சேரியில் ஜூலை 9-ம் தேதியில் தொழிற்சங்கங்கள் கூட்டாக பந்த், 8 இடங்களில் மறியல் போராட்டங்களை அறிவித்துள்ளனர். அன்றைய தினம் பேருந்து, ஆட்டோ இயங்காது. பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விட கோரிக்கை விடுத்துள்ளனர்.



புதுச்சேரி முதலியார்பேட்டை ஏஐடியூசி அலுவலகத்தில் தொழிற்சங்கத்தினர் கூட்டாக செய்தியாளர்களை நேற்று சந்தித்தனர். இச்சந்திப்பில் ஏஐடியூசி பொதுச் செயலாளர் சேது செல்வம் கூறியதாவது: தொழிலாளர்கள், விவசாயிகள், மக்கள் விரோத மத்திய மோடி அரசை கண்டித்தும், 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் வரும் ஜூலை 9ம் தேதி புதுச்சேரியில் வேலை நிறுத்தம் பந்த் நடத்துகிறோம். அன்றைய தினம் தொழிற்சங்கங்கள் கூட்டாக புதிய பேருந்து நிலையம், அரியாங்குப்பம், வில்லியனூர், பாகூர், மதகடிப்பட்டு, திருக்கனூர், சேதராப்பட்டு, காரைக்கால் ஆகிய 8 மையங்களில் மறியல் போராட்டம் நடத்தவுள்ளோம்.

புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்ப பெற வேண்டும். தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ரூ.26 ஆயிரம் நிர்ணயிக்க வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். பழைய ஓய்வூதியதிட்டத்தைதிரும்பவும் அமுலாக்க வேண்டும். புதுவையில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தை உரிய நிதி ஒதுக்கி செயல்படுத்த வேண்டும்.

மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் மற்றும் செயல்படாமல் உள்ள பாசிக், பாப்ஸ்கோ போன்ற அரசு சார்பு நிறுவனங்களை திறந்து திறன்பட நடத்தி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பது உட்பட 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த பந்த் போராட்டம் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பேருந்துகள், ஆட்டோக்கள், டெம்போக்கள் ஓடாது. பேருந்து, ஆட்டோ இயங்காமல் குழந்தைகள் பள்ளி, கல்லூரிக்கு செல்வது கடினம் என்பதால் அன்றைய தினம் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டும். மேலும், ஜூலை 9ம் தேதி திரையரங்குகள், மார்க்கெட், கடைகள் இயங்காது. தொழிற்சாலைகள், அரசு சார்பு நிறுவனங்கள் வேலை நிறுத்த நோட்டீசை முறைப்படி வழங்கப்பட்டுள்ளது என்று சேதுசெல்வம் கூறியுள்ளார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில், சிஐடியூ செயலாளர் சீனுவாசன், ஐஎன்டியுசிபொதுச் செயலாளர் ஞானசேகரன், எல்பிஎப் மாநில அமைப்பாளர் அண்ணா அடைக்கலம், ஏஐசிசிடியூ பொதுச் செயலாளர் புருஷோத்தமன், எல்எல்எப் செயலாளர் தங்க கதிர்வேல், எம்எல்எப் செயலாளர் வேதா வேணு கோபால், என்டிஎல்எப் செயலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் இளைஞர் அஜீத்குமார் லாக்கப் மரணம் – அகில இந்திய காமராஜர் பேரவை கடும் கண்டனம்

சிவகங்கை : ஜூலை. 2

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் இளைஞர் அஜீத்குமார் லாக்கப் மரணத்தை கண்டித்து அகில இந்திய காமராஜர் பேரவை மதுரை மாவட்ட தலைவர் குணா கண்டன அறிக்கை;



அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் கோவிலில் காவலாளியாகபணிபுரிந்து வந்த அஜீத்குமாரை சட்ட விரோதமாக விசாரணை செய்ய அனுமதி கொடுத்தது யார்? நகையை காணவில்லை என்று ஒருவர் மீது புகார் அளித்தால் காவல்துறை அவர் மீது FIR கூட பதிவு செய்யாமல் அஜீத்குமாரை விசாரித்ததற்கான காரணம் என்ன? அஜீத்குமார் மீது காவல்துறைக்கு சந்தேகம் இருந்தால் அவரை கைது செய்து 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தாதது ஏன்?. அஜித்குமாரை காவல்துறையினர் கடுமையாக தாக்க காரணம் என்ன. மயங்கிய நிலையில் அஜீத்குமாரை வேனில் வைக்க காரணம் என்ன?.

பைப்புகள் நொறுங்க நொறுங்ககாட்டுமிராண்டி தனமாக அஜித்குமாரை காவல்துறையினர் தாக்க வேண்டிய அவசியம் என்ன?. அஜித்குமார் குடிக்க தண்ணீர் கேட்டும் காவல்துறை தண்ணீர் கொடுக்காமல் மிளகாய் பொடியை வைத்து சித்திரவதை செய்து அஜித்குமாரை கொன்று இருக்கிறார்கள். அஜித்குமார் மரணத்தில் சந்தேகம் இருப்பதை தெரிந்து மானாமதுரை திருப்புவனம் அரசு மருத்துவமனையில் அஜித்குமாரின் சடலத்தை வாங்க மறுத்து இருக்கிறார்கள். இது போன்ற கொடூர தாக்குதல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து சந்தி சிரிக்கும் அளவிற்கு இருப்பதால் தமிழக மக்களுக்கே பாதுகாப்பு இல்லாத சூழலில் தமிழ்நாடு இருக்கிறது. அஜித்குமாரின் இந்த கொடூர கொலை உண்மை குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும். அரசு பணியில் இருந்து நிரந்தரமாக நீக்க வேண்டும்.

அஜித்குமார் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும். நீதிமன்றமே தாமாக முன் வந்து அஜித்குமாரை இழந்து வாழும் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க கொடூர கொலைகுற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். அத்தோடு அரசு பணியில் இருந்து நிரந்தரமாக நீக்க வேண்டும். அஜித்குமார் மரணத்திற்கு சிபிஐ விசாரணை முறையாக தேவை. சிபிசிஐடி விசாரணையை தமிழக அரசு திரும்ப பெற வேண்டும். உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்க சிபிஐ விசாரணைக்கு தமிழக முதல்வர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என அகில இந்திய காமராஜர் பேரவை மதுரை மாவட்ட தலைவர் குணா கோரிக்கை வைத்துள்ளார்.




புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர்களை போற்றும் விதமாகவும், உலக மருத்துவர்களுக்கு மருத்துவ தின வாழ்த்துக்கள் தெரிவித்தும் அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு பொன்னாடை அணிவித்து. சிலம்பாயி அறக்கட்டளை சிலம்பாயி சமுதாய கல்லூரி செயலாளர் முத்தம்மாள் முருகையா மருத்துவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இவ்விழாவில் வாகை ரோட்டரி கிளப் தலைவர், வெங்கடேஸ்வரா பள்ளி நிறுவனர் ரமணி ராஜேந்திரன், ரோட்டரி கிளப் செயலாளர் ப்ரியா காளிதாஸ், ரோட்டரி கிளப் பொருளாளர் காயத்ரி ஸ்டாலின், ரோட்டரி கிளப் உறுப்பினர் சௌமியா கோபிநாத் மற்றும் அனைத்து உறுப்பினர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் சிலம்பாயி சமுதாய கல்லூரி நர்சிங் மாணவர்கள், கல்லூரி சட்ட செயல் தலைவர் அசோகன் கணபதி, நர்சிங் HOD கமலாரிணி ஆகியோர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் மருத்துவமனைக்கு வருகை தந்து உலக மருத்துவர்கள் தினமான நேற்று மருத்துவர்களை வாழ்த்தி மகிழ்ந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த 36 ஆண்டு காலமாக கண் மருத்துவ உதவியாளராக பணிபுரிந்து இப்பகுதி மக்களுக்கு வீடு வீடாக சென்று மருத்துவ சேவை ஆற்றி, மேலும் இளைஞர்களை உடலை கட்டுக்கோப்புடன் வைத்துக் கொள்வதற்கு ஆண் அழகன் மையம் வைத்து நூற்றுக்கணக்கான இளைஞர்களை கட்டுக்கோப்பான உடல் அமைப்பினை உருவாகிட பயிற்சி வழங்கிய கோ.பரணிக்கு, ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் ராம்சந்தர் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. சுகாதாரத்துறை அலுவலர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், ஊர் பொதுமக்கள், இளைஞர்கள் கலந்து கொண்டு பாராட்டினர். பணிவு ஓய்வு பெற்றாலும், மேலும் இவரது சேவை தொடர வேண்டும் என்று பொதுமக்கள் அலுவலர்கள் கேட்டுக் கொண்டனர்.

# ஆனித் திருமஞ்சனம் : சிதம்பரம் நடராஜர் கோயில் தேரோட்டம் கோலாகலம்

கடலூர் : ஜூலை. 2

சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலில் ஆனித் திருமஞ்சன தரிசன உற்சவ தேரோட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேர் வடம் பிடித்து இழுந்தனர்.



உலக புகழ் பெற்ற சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலில் ஆனித் திருமஞ்சன தரிசன உற்சவ கொடியேற்றம் கடந்த 23-ம் தேதி நடந்தது. கோயிலில் சித்சபைக்கு எதிரே உள்ள கொடிமரத்தில் உற்சவ ஆச்சாரியார் சிவ கைலாஷ் தீட்சிதர் கொடி ஏற்றினார். அதன் பிறகு, பஞ்சமூர்த்தி வீதி உலா நடைபெற்றது.

தொடர்ந்து 24-ம் தேதி வெள்ளி சந்திர பிறை வாகனத்தில் சாமி வீதி உலா, 25-ம் தேதி தங்க சூரிய பிறை வாகனத்தில் சாமி வீதி உலா, 26-ம் தேதி வெள்ளி பூத வாகனத்தில் சாமி வீதி உலா, 27-ம் தேதி வெள்ளி ரிஷப வாகனத்தில் சாமி வீதி உலா (தெருவடைச்சான்), 28-ம் தேதி வெள்ளி யானை வாகனத்தில் சாமி வீதி உலா, 29 - ம் தேதி தங்க கைலாச வாகனத்தில் சாமிவீதி உலா, 30-ம் தேதி தங்கரதத்தில் பிச்சாண்டவர் வீதி உலாவும் நடைபெற்றது. இதனை தொடர்ந்து முக்கிய திருவிழாவான தேர் திருவிழா நேற்று நடைபெற்றது.

நேற்று காலை 6 மணிக்கு மேள, தாளம் முழங்கிட வேத மந்திரங்கள், தேவாரம், திருவாசகம் ஓதிட கோயில் இருந்து ஸ்ரீநடராஜர், ஸ்ரீ சிவகாமசுந்திரி அம்பாள், விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் தனித்தனி தேர்களில் எழுந்தருளினர். இதனை தொடர்ந்து சிவ, சிவா என்ற முழக்கத்துடன் பக்தர்கள் தேரின் வடம் பிடித்து இழுந்தனர். தேருக்கு முன்னாள் சிவனடியார்கள், வேத விற்பன்னர்கள் வேத மந்திரங்கள், தேவாரம், திருவாசகம் பாடியபடியே சென்றனர். பெண்கள் தேரோடும் நான்கு வீதிகளிலும் மாக்கோலமிட்டனர். சிவ பக்தர்கள் சிவ வாத்தியங்களுடன் சிவ தாண்டவம் ஆடினர்.

தேர் கீழ வீதி நிலையில் இருந்து புறப்பட்டு கீழவீதி, தெற்கு வீதி, மேல வீதி, வடக்கு வீதிகள் வழியாக சென்று இரவு நிலையை அடைந்தது. ஒவ்வொரு வீதிகளில் மண்டகபடி தாரர்கள் படையல் செய்தனர். மதியம் மேலவீதியும் வடக்கு வீதியும் சந்திக்கும் முகப்பில் பருவதராஜகுல மரபினர் ஸ்ரீநடராஜர், ஸ்ரீ சிவகாமி அம்மாளுக்கு பட்டு சார்த்தி படையல் செய்தனர். இரவு தேரில் இருந்து சாமிகள் மேள தாளம் முழங்கிட கோயிலுக்கு கொண்டு செல்லப்பட்டு, இரவு 8 மணிக்கு ஆயிரங்கால் முன் முகப்பு மண்டபத்தில் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்மாள் சமேத ஸ்ரீமன் நடராஜமூர்த்திக்கு ஏககால லட்சார்ச்சனை நடைபெற்றது.

இன்று சூரிய உதயத்துக்கு முன்பு, அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரை ஸ்ரீசிவகாமசுந்தரி அம்மாள் சமேத ஸ்ரீமன்நடராஜ மூர்த்திக்கு மகாபிஷேகம் நடைபெறும். அதன் பிறகு, காலை 10 மணிக்கு சித்சபையில் ரகசிய பூஜையும், பஞ்சமூர்த்தி வீதி உலா வந்த பிறகு, பிற்பகல் 3 மணிக்கு மேல் ஆனித் திருமஞ்சன தரிசனமும், ஞானகாச சித்சபை பிரவேசமும் நடைபெறும். நாளை பஞ்சமூர்த்தி முத்துப் பல்லக்கு வீதி உலாவுடன் திருவிழா நிறைவடைகிறது.

இதற்கான ஏற்பாடுகளை கோயில் பொதுதீட்சிதர்கள் செய்து வருகின்றனர். தேரோட்டத்தையொட்டி சிதம்பரம் டிஎஸ்பி லாமேக் தலைமையில் 500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுபட்டுள்ளனர். தேரோட்டத்தை முன்னிட்டு நான்கு வீதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பல்வேறு அமைப்புகளின் சார்பில் அன்னதானம் செய்யப்பட்டது. தரிசன விழாவையொட்டி வெளிநாடு, வெளிமாநில, வெளி மாவட்ட, உள்ளூர் பக்தர்கள் என ஆயிரக்கனக்கான பக்தர்கள் சிதம்பரம் நகரில் குவிந்துள்ளனர்.

# உளுந்தூர்பேட்டையில் பார்க்கவகுல சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு கருத்து கேட்பு கூட்டம்

கள்ளக்குறிச்சி:ஜூலை.2,

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே பாதூர் தனியார் மண்டபத்தில் பார்க்கவ குல சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்திற்கு பொதுச்செயலாளர் ஜெயசீலன் தலைமை தாங்கினார். மாநில நிர்வாகிகள் வெங்கடேசன், சத்யநாதன், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சபா. ராஜேந்திரன் வரவேற்றார். இக்கூட்டத்தில் 2010ம் ஆண்டு துவங்கப்பட்ட தமிழ்நாடு பார்க்கவகுல சங்கம் 2 சங்கங்களாக பிரிவு ஏற்பட்டு பார்க்கவ குல முன்னேற்ற சங்கம் என்றும் உள்ளது. இந்த 2 சங்கங்களும் சமுதாய மக்கள் நலன் கருதி ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். சில மாதங்களில் துவங்க உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பும் மற்றும் சாதிவாரி கணக்கெடுப்பும் மிகமுக்கியமானது என்பதால் சமுதாய மக்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தமிழகமக்கள் தொகையில் 5சதவீதம் அளவு கொண்ட சமுதாயத்துக்கு பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் 5 சதவீதம் உள் இடஒதுக்கீடு வழங்க தமிழக அரசை வலியுறுத்த வேண்டும் உள்ளிட்ட பல் வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் வைத்தியலிங்கம், வரதராஜன், பழனிச்சாமி, சரவணன், ரமேஷ், சண்முகம். தினகரன், செந்தில் தர்மலிங்கம், ராஜேந்திரன், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஸ்ரீ சிவா விஷ்ணு நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தின் ஜீரணோத்தாரண நூதன ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, குன்றத்தூர் நகராட்சி தலைவர் கோ.சத்தியமூர்த்தி, குன்றத்தூர் நகராட்சி துணைத்தலைவர் டி.திருநாவுக்கரசு, 22வது வார்டு குன்றத்தூர் நகராட்சி மன்ற உறுப்பினர் வி.சாரங்கபாணி மற்றும் விழா குழுவினர்கள், பக்தர்கள், பொதுமக்கள் என பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

## திமுக கட்சிக்கு உறுப்பினர்கள் சேர்ப்பதற்காக மட்டும் மக்களை சந்திக்கவில்லை

# அனைத்து விதமான கருத்துக்களை கொண்ட மக்களையும் சந்திக்க இருக்கிறோம் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்

தென்காசி : ஜூலை. 2

திமுக கட்சிக்கு உறுப்பினர்கள் சேர்ப்பதற்காக மட்டும் மக்களை சந்திக்கவில்லை. அனைத்து விதமான கருத்துக்களை கொண்ட மக்களையும் சந்திக்க இருக்கிறோம் என்று வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் தென்காசியில் பேட்டி.




தமிழக மக்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் நோக்கத்திலும் தமிழ் மொழியையும் அழிக்கும் நோக்கத்தில் செயல்படும் மத்தியில் ஆளுகிற பாசிச பாரதிய ஜனதா கட்சியின் முயற்சியை முறியடிக்கும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு என்கிற கருத்துக்களை மக்களிடம் எடுத்துக் கூறி, தமிழ் மொழியையும் தமிழில் மானத்தையும் காப்பதற்கு நாம் அனைவரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும். மேலும் தமிழக அரசுக்கு மத்திய அரசிடம் இருந்து கிடைக்கின்ற நிதி மற்றும் திட்டங்களை பெறுவதற்கும், மத்திய அரசின் ஓரவஞ்சனையை தடுத்து நிறுத்தி அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட தமிழக முதல்வர் தமிழக முழுவதும் பெரும் முயற்சி எடுத்து வருகிறார். தமிழகத்தில் 6800 பூத்கள் உள்ளது. தென்காசியில் 1564 பூத்கள் அமைந்துள்ளது. இந்தப் பகுதிகளில் உள்ள மக்களை, பூத் டிஜிட்டல் ஏஜென்சியை சேர்ந்த நிர்வாகிகள் சந்திக்கின்ற பணிகள் வருகிற மூன்றாம் தேதி தொடங்க இருக்கிறோம். 45 நாட்கள் நடைபெறும் இந்த பணியின் போது கட்சி பாகுபாடு இல்லாமல் அனைத்து வீட்டிற்கும் சென்று முதல்வர் ஸ்டாலினின் சாதனைகளை எடுத்து கூறும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

இப்போது தமிழக அரசின் மூலம் மக்களுக்கு கிடைக்கப்பட்டுள்ள சலுகைகளையும் வருகிற காலத்தில் மக்களுக்கு தேவையான திட்டங்கள் என்னென்ன என்பதையும் அறிந்து அதனுடைய அறிக்கையை தலைமைச் செயலகத்திற்கு அனுப்ப உள்ளோம். மகளிர் திட்டங்கள், முதியோர் உரிமை தொகை மற்றும் கிராமப்புற மக்களுக்கு என்னென்ன தேவைகள் என்பதை அறிந்து அதனை உடனடியாக நிறைவேற்றும் பணிகளை மேற்கொள்ள உள்ளோம். உறுப்பினர்கள் சேர்ப்பதற்காக மட்டும் இந்த பணிகள் இல்லை, திமுகவிற்கு வாக்களிக்கும் மக்களையும், திமுகவிற்கு வாக்கு அளிக்காத மக்களையும், திமுகவிற்கு வாக்கு செலுத்தும் மக்களையும் மூன்று விதமான கருத்துக்களை கொண்ட அனைவரும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வாக்கு செலுத்தும் வகையில் எங்களுடைய செயல்பாடு இருக்கும். 45 நாட்கள் நடைபெறும் இப்பணியில், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள் என அனைத்து நிர்வாகிளையும் இப்பணியில் ஈடுபட முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் தென்காசி மாவட்ட ஆட்சியர் மூலம் மாவட்டத்திற்கு தேவையான திட்டங்கள் என்னென்ன என்பதை அறிக்கையாக எடுத்து வைத்துள்ளோம். இதனை உடனடியாக முதல்வரிடம் கொண்டு செல்ல உள்ளோம். தென்காசி நகருக்கு முதல்வர் வரும்பொழுது என்னென்ன திட்டங்கள் மக்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்பதை முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பார் என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் கூறினார். அப்போது தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ராஜா, முன்னாள் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

02.07.2025 வரலாறு

### ஆரணி ஆற்றில் ரூ.20 கோடி செலவில் புதுப்பாளையம் கிராமத்தில் கட்டப்படும்

# உயர்மட்ட மேம்பால பணியை டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ ஆய்வு செய்தார்



ஊத்துக்கோட்டை, ஜூலை2–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்தில் ஆரணி ஆற்றின் குறுக்கே தரை பாலம் ஒன்று இருந்தது.

இந்நிலையில், ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது இந்த தரை பாலம் நீரில் மூழ்கும். இதனால் கொசவன்பேட்டை ஊராட்சியில் உள்ள அஞ்சாத்தம்மன் கோவில் அருகே இருந்து ஆரணி ஆற்றைக் கடந்து புதுப்பாளையம், காரணி, எருக்குவாய், நெல்வாய், மங்களம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தரைபாலத்தின் வழியே மறுக்கரைக்கு செல்ல இயலாத அவல நிலை நீடித்து வந்தது.

இதனால் ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது பல கிலோமீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு பெரியபாளையம் வழியாக மேற்கண்ட கிராம மக்கள் தங்களது அன்றாட பணிக்கு சென்று வருகின்றனர். இந்நிலையில், தரைப்பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக அமைத்து தர வேண்டும் என புதுப்பாளையம் ஊராட்சிமன்ற பொதுமக்கள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு வழங்கியிருந்தார். மேலும், ஆரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது தரைப்பாலத்தை பார்வையிட்ட பால்வளத்துறை அமைச்சராக இருந்த ஆவடி நாசர் தமிழக அரசு சார்பில் உயர்மட்ட மேம்பாலமாக அமைத்து தருகிறோம் என்று உறுதி கூறினார்.

இந்நிலையில், இப்பகுதியில் ரூ.20 கோடி செலவில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதி ஒதுக்கினார். எனவே, 175 மீட்டர் நீளம், 12 மீட்டர் அகலம், 3 மீட்டர் உயரம், 6 தூண்களுடன் இந்த உயர்மட்ட மேம்பாலம் 2 ஆண்டுகளில் கட்டி முடிக்க திட்டமிட்டனர்.

இதன்படி கடந்த ஆண்டு மார்ச் மாதம் இந்த உயர் மட்ட மேம்பாலம் கட்டும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி புதுப்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது. இந்த உயர்மட்ட மேம்பால பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணியை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், திமுக தலைமை செயற்குழு உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் ஆண்டி, உதவி பொறியாளர் பிரபாகரன் ஆகியோருடன் வந்து பார்வையிட்டார்.

மேலும், பாலப்பணிகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ளுங்கள் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிலையில், கொசவன்பேட்டை ஊராட்சிமன்ற மக்கள் உயர்மட்ட மேம்பாலத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள சுடுகாட்டுக்குச்செல்ல சாலை வசதியை ஏற்படுத்தித் தருமாறு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாபுவெங்கடேஷ் தலைமையில் கோரிக்கை மனுவை வழங்கினர்.

எனவே, நெடுஞ்சாலை துறை அதிகாரிகளிடம் சுடுகாடு செல்வதற்கு சாலை வசதியை ஏற்படுத்தித் தருமாறு அதிகாரிகளுக்கு டி.ஜெ.கோவிந்தராஜன் அறிவுறுத்தினார். எனவே, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் சுடுகாட்டுக்கு செல்ல சாலை வசதியை செய்து தருவதாக உறுதி கூறினர்.

இந்நிகழ்ச்சியின்போது ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து, ஐடி-விங் சந்தோஷ்பிரபா, தொழில் அதிபர் நாகராஜ், வக்கீல்கள் சீனிவாசன், முனுசாமி, வடமதுரை அப்புன் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.



ஜூலை 1 தேசிய மருத்துவர் தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், பல்லடம் இமைகள் ரோட்டரி சங்கம் சார்பாக அதன் நிர்வாகிகள் அப்பகுதியில் உள்ள மருத்துவர்களை நேரில் சென்று சந்தித்து பொன்னாடை போர்த்தியும், நினைவு பரிசுகள் வழங்கியும் அவர்களின் சேவையை பாராட்டி ,வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர்.

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு தூக்கு மேடையிலிருந்து 27 தமிழர் மீட்பு நூல் வெளியீட்டு விழா



சென்னை சர்.பிடி. தியாகராயர் அரங்கில் உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் எழுதி வெளியிட்ட ராஜீவ்காந்தி கொலை வழக்கு தூக்கு மேடையிலிருந்து 27 தமிழர் மீட்பு நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் நீதியரசர் சந்துரு, ஆனூர் ஜெகதீசன், கவிஞர் காசி ஆனந்தன், தோழர் தியாகு, மதிமுக செந்திலதிபன், நக்கீரன் கோபால், பேராசிரியர் கல்விமணி, வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், தேனிசை செல்லப்பா, விடுதலை ராஜேந்திரன், மற்றும் பலரும் பங்கேற்ற முப்பெரும் விழா நடைபெற்றது இதில் பலரும் கலந்து கொண்டனர்.

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு தூக்கு மேடையிலிருந்து 27 தமிழர் மீட்பு நூல் வெளியீட்டு விழா



சென்னை சர்.பிடி. தியாகராயர் அரங்கில் உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் எழுதி வெளியிட்ட ராஜீவ்காந்தி கொலை வழக்கு தூக்கு மேடையிலிருந்து 27 தமிழர் மீட்பு நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் நீதியரசர் சந்துரு, ஆனூர் ஜெகதீசன், கவிஞர் காசி ஆனந்தன், தோழர் தியாகு, மதிமுக செந்திலதிபன், நக்கீரன் கோபால், பேராசிரியர் கல்விமணி, வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், தேனிசை செல்லப்பா, விடுதலை ராஜேந்திரன், மற்றும் பலரும் பங்கேற்ற முப்பெரும் விழா நடைபெற்றது இதில் பலரும் கலந்து கொண்டனர்.

# பள்ளி வளாகத்திற்குள் கட்டப்படும் நியாய விலை கடை பொதுமக்கள் எதிர்ப்பு : கண்டுகொள்ளாத இலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்



செங்கல்பட்டு ஜூலை 2

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அடுத்த கொடூர் ஊராட்சியில் அரசு தொடக்கப்பள்ளி அமைந்துள்ளது. இந்தப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை மாணவர்கள் படித்து வருகின்றனர். தனியார் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்கும் மோகத்திலிருந்து மக்கள் தற்போது அரசு பள்ளியை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் பகுதியில் இயங்கி வரும் அரசு பள்ளியில் மாணவர்கள் நன்றாக படித்து வருகின்றனர். தற்போது நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு பொது தேர்வில் 100% சதவீத தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இந்தப் பள்ளியில் பயின்றவர்கள். கொடூர் கிராமத்தில் ஏற்கனவே நியாய விலைக் கடை இருந்தும் தற்போது புதிதாக கட்ட டெண்டர் விடப்பட்டது.

புதிய நியாய விலை கட்ட ஊராட்சியில் அநேக இடங்களில் இருந்தும் பள்ளியின் வளாகத்திற்கு உள்ளே கட்ட அனுமதி அளித்தது யார்? பள்ளியின் உள்ளே நியாய விலை கடை அமைந்தால் பொதுமக்கள் அங்கே கூச்சலிடும் போது மாணவர்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகும் பலமுறை வட்டார வளர்ச்சி அலுவலரை தொடர்பு கொண்டு கல்வி வளாகத்திற்குள் நியாய விலை கடை அமைக்க வேண்டாம் என்று பொதுமக்கள் வலியுறுத்தியும் இலத்தூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் அதைக் கண்டு கொள்ளாமல் மீண்டும் கட்டுவதற்கு உடந்தையாக இருக்கின்றார்.

மாணவர்களின் கல்வியின் எதிர்காலத்தை மனதில் கொண்டு இந்தத் திட்டத்தினை கைவிட்டு வேறு பகுதியில் நியாய விலை கடை அமைக்க வேண்டும் என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் அரசுக்கு கோரிக்கைவைத்துள்ளனர்.

# எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளர் ஐ.ராஜா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆதரவு இல்லத்தில் அன்னதானம் வழங்கினர்



ஊத்துக்கோட்டை, ஜூலை2–

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளராக பதவி வகித்து வருபவர் பெரியபாளையம், அம்பேத்கார் நகரை சேர்ந்த ஐ.ராஜா ஆவார்.

இவரது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஐ.ராஜா - பவானி தம்பதியரின் திருமண நாளை முன்னிட்டும் திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், குமரப்பேட்டை ஊராட்சி, ஆரணி- பெரியபாளையம் நெடுஞ்சாலையில் ராள்ளபாடியில் இயங்கிவரும் ஆதரவு இல்லத்தில் உள்ள நூற்றுக்கணக் கானோருக்கு இனிப்பு, வாட்டர்பாட்டில், வாழைப்பழம் உள்ளிட்ட அறுசுவை உணவை அன்னதானமாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அருணகிரி, வக்கீல் கோபிநாத் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### செஞ்சி அரசு மருத்துவமனையில் உலக மருத்துவர் தின கொண்டாட்டம்

# மருத்துவர்களுக்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்



செஞ்சி, ஜூன்-2.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் வேட்டவலம் லயன்ஸ் சங்கம் மற்றும் செஞ்சி அரசு மருத்துவமனை சார்பில் உலக மருத்துவர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட சுகாதாரப் பணிகளின் இணை இயக்குனர் டாக்டர் ரமேஷ்பாபு தலைமை தாங்கினார். செஞ்சி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் கமலக்கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

செஞ்சி அரசு மருத்துவமனை மருத்துவர் பாலகோபால் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மருத்துவமனையில் பணியாற்றும் அனைத்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு சால்வை அணிவித்து மருத்துவர் தின நல்வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான், லயன்ஸ் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட தலைவர் விஜய் ஆனந்த், வேட்டவலம் வட்டாரத் தலைவர் வெங்கடேசன், துணை தலைவர் மனோகரன், செஞ்சி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அஜித்தா, செந்தில் முரசு, கோர்பச்சல், மதுரித்ரா, சௌமியா, செவிலியர்கள் கண்காணிப்பாளர் ஆதிலட்சுமி உள்ளிட்ட செவிலியர்கள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் மருந்தாளுனர் ஸ்ரீதர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய நிழற்குடைக்கு அடிக்கல் நாட்டினார்



கடையநல்லூர், ஜூலை 2

தென்காசி மாவட்டம்- கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் சொக்கம்பட்டி திரிகூடபுரத்தில் ரூ.7.45 லட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிழற்குடை அமைக்க மாவட்ட கழக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான செ.கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட துணை செயலாளர் பொய்கை சோ மாரியப்பன், கடையநல்லூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பெரியதுரை, வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜாராம் பாண்டியன் மாவட்ட எம்ஜிஆர் மன்ற தலைவர் வசந்தம் முத்துப்பாண்டி புன்னையாபுரம் முத்துப்பாண்டி, சொக்கம்பட்டி பெரியதுரை, வலசை செல்லத்துரை, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் தியாகராஜன், அரவிந்த், கடையநல்லூர் நகர மாணவரணி செயலாளர் ராஜேந்திர பிரசாத், நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் மாரியப்பன், திரிகூடபுரம் கிளை கழக செயலாளர்கள் பூசைத்துரை, பாண்டி, சுப்பிரமணியன், முத்தையா, ஹரிஹரன், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு

# வழிகாட்டுதல் மற்றும் ஊக்கமளிக்கும் நிகழ்ச்சியில் அஷ்வின் ராமசாமி பங்கேற்பு



ஊத்துக்கோட்டை ஜூலை 2

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயல் பகுதியில் டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது.

இந்நிலையில், இப்பள்ளியில், 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வை மாணவர்கள் எவ்வாறு? எதிர்கொள்வது. மேல்நிலைப் படிப்புக்கு பின்னர், என்ன? படிக்கலாம் என்பது குறித்த வழிகாட்டுதல் மற்றும் ஊக்கமளிக்கும் நிகழ்ச்சி டி.ஜெ.எஸ் இன்ஜினியரிங் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ,டி.ஜெ.எஸ் கல்விக்குழுமத்தின் தலைவரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வி நெறி காவலர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியை கல்விக் குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ.ஆறுமுகம் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அனைவரையும் பள்ளியின் முதல்வர் பா.ஞானப்பிரகாசம் வரவேற்றார்.

கல்விக்குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ.ஆறுமுகம், கல்விக்குழுமத்தின் துணைத்தலைவர் டி.ஜெ. தேசமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், சிறப்புவிருந்தினராக பள்ளியின் தாளாளர் டாக்டர் எ.பழனி கலந்து கொண்டார்.

இதில், சிறப்பு அழைப்பாளராக வாரங்கல், தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த கல்வி ஊக்குவிப்பாளர் அஸ்வின் ராமசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பேசினார். அப்பொழுது அவர் மாணவர்கள் 10 ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வை எவ்வாறு? எதிர்கொள்வது அதிக மதிப்பெண்கள் பெற மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் விளக்கிக்கூறினார்.

மேலும், மேல்நிலைப் படிப்புக்கு பின்னர், பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல், விவசாயம், சமையல், இராணுவம், கப்பல், விமானப்பொறியியல் போன்ற பல்வேறு படிப்புகள் உள்ளது என்பதையும் அதற்கான கல்லூரிகள் இருப்பதையும் மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்து கூறினார்.

இதில், சென்னை சோசியல் லயன்ஸ் சங்க நிர்வாகி லயன் ரமேஷ் குமார், நண்பன் எம். முகம்மது அபுபக்கர், இயக்குனர்கள் ஆ.விஜயகுமார், ஆ. கபிலன், தே.தினேஷ், கோ. தமிழரசன், உறுப்பினர்கள் சொ.சண்முகசுந்தரம், ரா.ஜெயக்குமார், ஆ. ராஜேஷ், கல்விக்குழுமத்தின் நிர்வாக அலுவலர் செ.ஏழுமலை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில், பள்ளியின் தலைமை ஆசிரியர் ரவி அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை டிஜெஎஸ் கல்வி குழுமம் மற்றும் லயன்ஸ் கிளப் சார்பில் சிறப்பாக செய்திருந்தனர்.

# பாறைக்குழியில் மாநகராட்சி குப்பை கொட்டிய விவகாரம் வாகனங்களை சிறை பிடித்து பொதுமக்கள் சாலை மறியல்



திருப்பூர் ஜூலை 2

திருப்பூர் வடக்கு வட்டத்திலுள்ள மாநகராட்சிக்குட்பட்ட 2 மண்டலம் நெருபெரிச்சல் பத்திரபதிவு அலுவலகம் அருகேயுள்ள பாறைக்குழியில் மாநகராட்சி பகுதியிலுள்ள குப்பைகளை கொட்டி வருகின்றதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு துர்நாற்றத்தால் மக்கள் வசிக்க முடியாத நிலை காரணமாக அப்பகுதிமக்கள் ஒன்றுதிரண்டு வாகனங்களை சிறை பிடித்து நெருபெரிச்சல் நால்ரோட்டில் திருமுகன் பூண்டி, பூலுவப்பட்டி, வாலிபாளையம் ஊத்துக்குளி பிரதான சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக அப்பகுதியில் வாகன போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மேலும் உடனடியாக மாநகராட்சி நிர்வாகம் தலையிட்டு இந்த பாறைக்குழியில் குப்பை கொட்டுவதை முற்றிலுமாக நிறுத்திட வேண்டும் அப்படி நிறுத்தாவிட்டால் தொடர்ந்து போராட்டம் நடைபெறும் என போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

# செஞ்சியில் ஓரணியில் தமிழ்நாடு செயலி மூலம் திமுகவினருக்குபயிற்சி கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து சிறப்புரை

செஞ்சி, ஜூலை-2.

திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பின் கீழ் திமுகவில் புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியம், செஞ்சி, அனந்தபுரம் பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் மற்றும் பூத் டிஜிட்டல் முகவர் பயிற்சி கூட்டம் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினரும் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமைதாங்கி ஓரணியில் தமிழ்நாடு செயலிமூலம் திமுகவில் புதிய உறுப்பினர் சேர்க்கை பயிற்ச்சியை தொடங்கிவைத்து இப்பணிகள் குறித்து எடுத்துரைத்துசிறப்புரை ஆற்றினார்.



தொடர்ந்து செஞ்சி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், செஞ்சி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மணிவண்ணன் ஆகியோர் ஓரணியில் தமிழ்நாடு செயலிபயன்படுத்தி திமுகவில் புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்துபயிற்சி அளித்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், நகர செயலாளர்கள் செஞ்சி கார்த்திக், அனந்தபுரம் சம்பத், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்கஏழுமலை, அகிலா பார்த்திபன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஆகிலன் நூற்றாண்டு நினைவு நூலகம் திறப்பு



**புதுக்கோட்டை : ஜூலை. 2**

தமிழில் முதல் ஞானபீட விருது பெற்ற அகிலன் நினைவாக, அவர் பிறந்த ஊரான பெருங்களூரில், புதுகை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நூலகக் கட்டிடத்தை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, அகிலனின் 103 வது பிறந்த தின விழாவில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில், ஊர் பொதுமக்கள் சார்பில், அகிலனுக்கு மணிமண்டபம் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்ற கோரிக்கை சட்டமன்ற உறுப்பினரிடம் வைக்கப்பட்டது. சட்டமன்றத்தில் இது தொடர்பாக பேசுவதாக உறுதியளித்தார்.

இந்த விழாவில் அகிலன் மகள் அங்கயற்கண்ணி, மருமகன் கதிர்வேல், பேத்தி, கட்டிடம் அமைய உதவிய ஒன்றிய கவுன்சிலர் முத்துலெட்சுமி சாமியப்பா, முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் சரன்யா ஜெய்சங்கர், மாவட்ட மைய நூலகர் கார்ல்மார்க்ஸ், நூலகம் அமைய தொடர்முயற்சி எடுத்த புதுக்கோட்டை வரலாற்றுப் பேரவைச் செயலர் மு.மாரிமுத்து, வாசகர் பேரவைச் செயலர் சா.விஸ்வநாதன் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். மைலம் ஆதீனகர்த்தரால் நூலகத்திற்கு 150 நூல்கள் பரிசளிக்கப்பட்டது.

# ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெற இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்



சென்னை : ஜூலை. 2

அறிவிக்கப்பட்டு, அமலுக்கு வந்துள்ள ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் என மத்திய அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "பாஜக மத்திய அரசு அறிவித்த ரயில் கட்டண உயர்வு ஏழை மக்களை, குறிப்பாக அடித்தட்டு மக்களை கடுமையாக பாதிக்கும் என்பதை ஆதாரப்பூர்வமாக எடுத்துக் கூறி, அதனை திரும்பப் பெற வேண்டும் என, எதிர்க்கட்சிகள், ரயில் பயணிகள் சேவை அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரும் வலியுறுத்தி வந்த நிலையில், மத்திய அரசு எந்த வித மாறுதலும் இல்லாமல் நேற்று முதல் (ஜூலை 1ம் தேதி) ரயில் கட்டண உயர்வை அமலாக்கியுள்ளது.

கட்டண உயர்வை, ரூபாய் கணக்கில் கூறாமல் பைசா கணக்கில் கூறியிருப்பது பொதுமக்களை ஏமாற்றும் வஞ்சகமாகும். நாள்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் என்ற முறையில், ஆண்டுக்கு 400 கோடி பேர் பயணிக்கும் ரயில் பயணம் எத்தனை கோடி கிலோ மீட்டராக இருக்கும் என்பதை கணக்கிட முடியாமல் மறைக்கும் செயலாகும். இது தவிர முன்பதிவு முறையில் தட்கல், பிரீமியம் தட்கல், அதி விரைவு வண்டி, சிறப்புக் கட்டண சேவை என பல்வேறு வகைகளில் ரயில் பயணிகளிடம் வசூலிக்கப்பட்டு வருகின்றன.

கிலோ மீட்டருக்கு 4 பைசா வரை கட்டண உயர்வு என்பதன் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் கட்டண சுமையை பயணிகள் தலையில் சுமத்தியிருக்கும் மோடியின் மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அறிவிக்கப்பட்டு, அமலாக்கத் தொடங்கியுள்ள ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்று முத்தரசன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் பணி அரசு அமைத்த குழுவை அணுக ஐகோர்ட் உத்தரவு



சென்னை : ஜூலை. 2

டாஸ்மாக் கடைகளில் காலி மதுபான பாட்டில்களைத் திரும்பப் பெறும் பணிக்கு தனியாக ஊழியர்களை நியமிப்பது தொடர்பாக அரசு நியமித்துள்ள குழுவை அணுக டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின்படி, விற்பனை செய்யப்படும் மதுபாட்டில்கள் மீது கூடுதலாக 10 ரூபாய்க்கு விற்க வேண்டும். வாடிக்கையாளர்கள் காலி பாட்டில்களை திரும்பத் தரும் பட்சத்தில் 10 ரூபாயை திருப்பிக் கொடுக்க வேண்டும். இந்த பணிகளுக்கு தற்போது டாஸ்மாக் கடைகளில் பணியாற்றுவோரை அமர்த்தாமல், தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும். காலி பாட்டில்களை வைக்க தனி இடம், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். டாஸ்மாக்கில் பணியாற்றும் ஊழியர்கள் தற்போது 12 மணி நேரம் வரை பணியாற்ற வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில், காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் பணிக்கும் நியமிப்பதால் அவர்களுக்கு பணிச்சுமை ஏற்படும்." என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், "காலி மது பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டம் தொடர்பாக ஊழியர்களின் குறைகளை ஆய்வு செய்ய டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சங்கம் அந்த குழுவை அணுகலாம்" என தெரிவித்தார்.

இதனைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, காலி பாட்டில்களை திரும்ப பெரும் பணிக்கு தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக அரசு நியமித்துள்ள குழுவை அணுகும்படி மனுதாரர் சங்கத்துக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி அண்ணா பல்கலைக்கழகம் கல்லூரிகளின் தரவரிசை பட்டியலில் புதிய சாதனை படைத்துள்ளது




**திருவள்ளூர், ஜூலை, 2 –**

திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டு ரயில் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள 33 ஆண்டுகால பாரம்பரியத்துடன் கூடிய ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி, தன்னை ஒரு முதன்மையான நிறுவனமாக தொடர்ந்து நிரூபித்து வருகிறது. அண்ணா பல்கலைக்கழக தரவரிசையில் வலுவான நிலைப்பாட்டிற்கு பெயர் பெற்ற இந்தக் கல்லூரி, பொறியியல் கல்வியில் தொடர்ந்து மகத்தான சேவை செய்து வருகிறது.

அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட 450க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் முதல் 50 கல்லூரிகளில் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி பெருமையுடன் ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை புரிந்துள்ளது.

இந்த சாதனை குறித்து ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கையில், இந்த சாதனை எங்கள் தொலைநோக்கு மேலாண்மை, திறமையான முன்னாள் மாணவர்கள், சிறப்புமிக்க ஆசிரியர்கள் மற்றும் கடின உழைப்பாளி மாணவர்கள் போன்ற எங்கள் பங்குதாரர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் வெளிப்பாடு. பெற்றோர்களின் அசைக்க முடியாத ஆதரவையும் நாங்கள் மிகவும் மதிக்கிறோம், அவர்களின் பங்களிப்புகள் மறக்க முடியாதவை.

இந்த நிறுவனம் சிறந்து விளங்க உறுதி பூண்டுள்ளது என்றும் வரும் ஆண்டுகளில் இன்னும் பெரிய உயரங்களை எட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் மாணவர்கள் சேர்ந்து தங்களது வளமான எதிர்காலத்தை நோக்கி வீர நடை போடலாம் என்று கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்

# கடையநல்லூரில் தமிழக முதல்வரின் ஓரணியில் தமிழகம்



**கடையநல்லூர் : ஜூலை. 2**

தென்காசி மாவட்டம்-கடையநல்லூர் பேட்டை காமினி மஹாலில் கடையநல்லூர் வடக்கு மற்றும் தெற்கு நகர கழகத்தின் சார்பில் பிடிஏ கூட்டம் நகரச் செயலாளர்கள் வடக்கு எஸ். அப்பாஸ், இத்தாலியன் பீரப்பா தெற்கு தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் வழக்கறிஞர் நவ்ஷாத், தென்காசி வடக்கு மாவட்ட திமுக முன்னாள் செயலாளர் செல்லத்துரை, கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

மேலும் கூட்டத்தில் ஐடி விங் மாவட்ட அமைப்பாளர் அழகு தமிழ் சங்கர் கலந்து கொண்டு உரையாற்றினார் மேலும் ஐடி விங் நகர ஒருங்கிணைப்பாளர் ஷாகிர் உசேன் தொகுதி ஒருங்கிணைப்பாளர் சுதாகர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஐவேந்திரன் தினேஷ், சபிக் அலி, மாலிக் மைதீன், ஷோபனா ராணி, கலாநிதி, அப்துல் ஜப்பார், கிருஷ்ணராஜா கண்ணன் சிறுபான்மையினர் அணி நகர அமைப்பாளர் அப்துல் வஹாப், ரவி, காசி, நல்லையா, ஈஸ்வரன், ஆசாத், கணேசன், இளைஞர் அணி அமைப்பாளர் கே.ஆர். யாசின், சேப்பிளை அலி, அயூப்கான், அக்பர் முனுசாமி காளிச்சரண் சக்திவேல், சுகுமார் எஸ். எஸ். அப்துல் காதர், யாத்ரா பழனி, சக்திவேல், மஸ்தான் அலி, சுப்பா ராம், செல்லப்பா, ராமையா, செய்யது மசூது, அப்துல் ரசாத் மணிகண்டன் சிட்டி திவான் மைதீன் ஜபருல்லா, ஷெரிப் ஹோட்டல் ஹாபிப்புல்லா, மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பூத் ஏஜென்ட்கள் மற்றும் கழக நிர்வாகிகள் திராளாக கலந்து கொண்டனர்.

# பாமக-வை சிதைக்கும் நோக்கத்துடன் திமுக செயல்படுகிறது : கட்சி நிர்வாகிகள் கூட்டாக பேட்டி



தருமபுரி : ஜூன். 2

தன் எதிரிகளை சிதைக்க வேண்டும் என்பதற்காக, வலிமையாக உள்ள பாமக-வை சிதைக்கும் நோக்கத்துடன் திமுக செயல்பட்டு வருகிறது என தருமபுரியில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் பாமக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தருமபுரியில் நேற்று தருமபுரி எம்எல்ஏ வெங்கடேஷ்வரன் தலைமையில் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தினர். அப்போது பேசிய எம்எல்ஏ வெங்கடேஷ்வரன், 'சேலம் மேற்கு தொகுதி எம்எல்ஏ அருள் சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோது பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் குறித்து அவதூறான சில கருத்துகளை தெரிவித்துள்ளார். இது வன்மையான கண்டனத்துக்கு உரியது. பாமக தலைமையில் அண்மைக் காலமாக நிலவும் குழப்பமான சூழலை பயன்படுத்தி அருள் எம்எல்ஏ சுய லாபத்திற்காக இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறார். அவரது இன்றைய வளர்ச்சியும், அடையாளமும் பாமக கொடுத்தது என்பதை மறந்து விட்டு செயல்படுகிறார்' என்றார்.

தொடர்ந்து முன்னாள் எம்எல்ஏ வேலுசாமி கூறும்போது, 'பாமக-வில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடான சூழலை பயன்படுத்தி சேலத்தைச் சேர்ந்த பாமக எம்எல்ஏ அருள், பாமக தலைவர் அன்புமணியை கவுரவக் குறைவாகவும், சிறுமை படுத்தும் விதமாகவும் ஊடகங்கள், சமூக ஊடகங்களில் பேசி வருகிறார். அவரது பேச்சு மொத்த பாமக-வினரையும் வேதனைக்கும், கோபத்துக்கும் உள்ளாக்கி உள்ளது. அவர் பேசியதை உழவர் பேரியக்கம் சார்பில் கண்டிக்கிறோம். பாமக-வின் எதிர்காலம் அன்புமணி ராமதாஸ் தான்.

அவரை அவதூறாக பேசும் அருள் இந்த கட்சியில் தொடருவாரா? திமுக தூண்டுதலின் பேரில் பாமக-வை பலவீனப்படுத்த அருள் இவ்வாறு செயல்படுகிறார். மேலும், அவர் வேறு கட்சிக்கு செல்லும் நோக்கத்துடன் இவ்வாறு பேசுகிறார். கட்சியின் நிறுவனருக்கும் தலைவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்களை விரைவில் களைந்து 2026 சட்டமன்ற தேர்தலுக்குள் அனைவரும் இணைந்து நிற்க வேண்டும் என்பது எங்களின் விருப்பம். ஆனால், எம்எல்ஏ அருளின் விருப்பம் வேறாக உள்ளது.

அருள் ஓர் அரசியல் வியாபாரி, தரகர். தன் உயிருக்கு அன்புமணி ஆதரவாளர்களால் ஆபத்து என்றும் கூறி வருகிறார். ஏற்கெனவே ஒருமுறை இரவில் தன்னை மர்ம நபர்கள் தாக்கியதாக மருத்துவமனையில் அட்மிட் ஆனார். போலீஸ் விசாரணையில், தனது ஓட்டுநரை வைத்து தாக்கச் செய்து அருள் நடத்திய நாடகம் தெரிய வந்தது. அதைப்போலவே இப்போதும் ஏதாவது நாடகம் நடத்திவிட்டு அன்புமணி ஆதரவாளர்கள் தான் காரணம் என்றும் கூற வாய்ப்புள்ளது.

உலகத் தலைவர்களே பாராட்டும் தலைவரான அன்புமணியை விமர்சிப்பதை அருள் நிறுத்தி விட்டு, கட்சியை பலவீனப்படுத்தும் தனது கனவையும் மறக்க வேண்டும். இனியும் அவர் இதேபோன்று செயல்பட்டால் பாமக-வினர் பதிலடி கொடுப்போம்' என்றார்.

அவரைத் தொடர்ந்து, முன்னாள் எம்.பி மருத்துவர் செந்தில் கூறும்போது, 'பாமக-வின் இரு தலைவர்கள் இடையிலான உரசல் மற்றும் விரிசல் விரைவில் சரியாகும் என கட்சியில் உள்ள பெரும்பாலானவர்கள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

ஆனால், ஒருசிலர் இந்த மோதலால் ரத்தம் சிந்த வேண்டும், அந்த ரத்தத்தை ஓநாய் போல குடித்து வாழ்வோம் என கருதுகின்றனர். வரவிருக்கும் சட்டப் பேரவை தேர்தலில் தங்களால் வெற்றி பெற முடியாது என திமுக-வினருக்கு தெரிந்துவிட்டது. அதனால் தன் எதிரிகளை சிதைக்கும் நோக்கத்துடன், குறிப்பாக வலிமையாக உள்ள பாமக-வை சிதைக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. அனைவரின் காலிலும் விழும் எம்எல்ஏ அருள் சுயமரியாதை இல்லாதவர். இவ்வாறு நடந்து, சுயமரியாதை இயக்கமான பாமக-வை சிறுமை செய்கிறார். அருள் மீது பாமக தலைவர் அன்புமணி உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இயக்கத்தை விட்டு செல்பவர்கள் தலையில் இருந்து விழுந்த முடி என பெரியார் கூறுவார். எம்எல்ஏ அருளை நாங்கள் அப்படித்தான் பார்க்கிறோம்' என்றார். இந்நிகழ்ச்சியின்போது, கட்சி நிர்வாகிகள் சாந்தமூர்த்தி, செல்வம், அரசாங்கம், வணங்காமுடி, சண்முகம், பெரியசாமி, முருகசாமி, மாது உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# சிவகாசி அருகே பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழப்பு 6-ஆக அதிகரிப்பு : முதல்வர் ஸ்டாலின் நிவாரணம் அறிவிப்பு



*சிவகாசி : ஜூலை. 2*

*விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே சின்னகாமன்பட்டியில் உள்ள கோகுலேஸ் பட்டாசு ஆலையில் நேற்று காலை ஏற்பட்ட வெடிவிபத்தில் 8 அறைகள் இடிந்து தரைமட்டமாயின. இந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது. வெடி விபத்து குறித்து வழக்கு பதிவு செய்த சாத்தூர் நகர் போலீஸார் பட்டாசு ஆலை போர்மேன் ரவி (36) என்பவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.*

*விருதுநகர் மாவட்டம் சிவகாசி - சாத்தூர் இடையே உள்ள சின்னகாமன்பட்டியில் கமல் குமார் என்பவர் நாக்பூரில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டு துறை (பெசோ) உரிமம் பெற்று கோகுலேஸ் ஃபயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார்.*

*இந்த பட்டாசு ஆலையில் 50- க்கும் மேற்பட்ட அறைகளின் என்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று காலை வழக்கம்போல் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த போது மருந்து கலவை செய்யும் அறையில் காலை 8.30 மணி அளவில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.*

*இந்த விபத்தில் அருகே இருந்த 8 அறைகள் இடிந்து தரைமட்டமானது. தகவல் அறிந்து வந்த சிவகாசி மற்றும் சாத்தூர் தீயணைப்பு துறையினர் தீயை அணைத்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.*

*இந்தவிபத்தில் பட்டாசு ஆலை பணியாற்றிய 5 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். அதில் மீனாம்பட்டியைச் சேர்ந்த ராமசாமி மகன் மகாலிங்கம் (55) என்பவரது உடல் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், சிவகாசி அரசு மருத்துவமனையில் படுகாயங்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட ராமமூர்த்தி என்ற தொழிலாளி உயிரிழந்தார். இதனால் சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6- ஆக அதிகரித்துள்ளது. வெடி விபத்து குறித்து வழக்கு பதிவு செய்த சாத்தூர் நகர் போலீஸார் பட்டாசு ஆலை போர்மேன் ரவி (36) என்பவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.*

*விபத்தில் காயமடைந்த ஓ.கோவில்பட்டியை சேர்ந்த ராமராஜ் மகன் ராமமூர்த்தி (45), செவல்பட்டியை சேர்ந்த கூடலிங்கம் மகன் லிங்குசாமி (45) உட்பட 4 பேர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த விபத்து குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று கூறியுள்ளார்.*

# பயணிகளின் அனைத்து தேவைகளுக்குமான ரயில்ஒன் செயலி – ரயில்வே அமைச்சர் அறிமுகம்



*புதுடெல்லி : ஜூலை. 2*

*அனைத்து பயணிகளின் தேவைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணும் நோக்கில், ரயில்ஒன் செயலியை (RailOne App) ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிமுகப்படுத்தினார்.*

*இது தொடர்பாக ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பயணிகளின் வசதிகளை மேம்படுத்த ரயில்வே தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புதிய தலைமுறை ரயில்களை அறிமுகப்படுத்துவது, ரயில் நிலையங்களை மறுவடிவமைப்பு செய்வது, பழைய ரயில் பெட்டிகளை புதிய ரயில் பெட்டிகளாக மேம்படுத்துவது போன்ற பல நடவடிக்கைகள் கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவை, பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தியுள்ளன.*

*ரயில்வே தகவல் அமைப்புகள் மையத்தின் (CRIS) 40வது நிறுவன தினத்தை முன்னிட்டு புதுடெல்லியில் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் RailOne என்ற புதிய செயலியை நேற்று அறிமுகப்படுத்தினார். பயன்படுத்துவதற்கு எளிதான, அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு செயலி இது. இந்த செயலியை ஆண்ட்ராய்டு ப்ளே ஸ்டோர் மற்றும் iOS ஆப் ஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.*

*முன்பதிவு செய்யப்படாத மற்றும் பிளாட்ஃபார்ம் டிக்கெட்டுகளை பெறுவது, ரயில் எந்த இடத்தில் உள்ளது என்பதை அறிவதற்கான நேரடி ரயில் கண்காணிப்பு, குறை தீர்க்கும் சேவை, மின் கேட்டரிங், போர்ட்டர் முன்பதிவு மற்றும் கடைசி மைல் டாக்ஸி ஆகிய சேவைகளை இந்த செயலி மூலம் பெறலாம். முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டுகள் வழக்கம்போல் IRCTC-ல் தொடர்ந்து வழங்கப்படும். IRCTC உடன் கூட்டு சேர்ந்துள்ள பல வணிக பயன்பாடுகளைப் போலவே RailOne செயலியும் IRCTC ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*mPIN அல்லது பயோமெட்ரிக் மூலம் உள்நுழையக்கூடிய ஒற்றை உள்நுழைவு வசதியை RailOne கொண்டுள்ளது. இது ஏற்கனவே உள்ள RailConnect & UTS செயலிகளையும் உள்ளடக்கி உள்ளது. பல பயன்பாடுகளை நிறுவ வேண்டிய அவசியமில்லை என்பதால், இந்த செயலி இடத்தை மிச்சப்படுத்துகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# தெலங்கானா விபத்து : உயிரிழப்பு 44 ஆக அதிகரிப்பு ரூ.1 கோடி இழப்பீடு வழங்க முதல்வர் உத்தரவு



ஹைதராபாத் : ஜூலை. 2

தெலங்கானா மாநிலம் பஷமைலாரம் பகுதியில் உள்ள சிகாச்சி ரசாயன ஆலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நிகழ்ந்த பயங்கர வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.1 கோடி இழப்பீடு வழங்கப்படும் என்று முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம், சங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள பஷமைலாரம் பகுதியில் சிகாச்சி ரசாயன தொழிற்சாலை கடந்த 40 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு மைக்ரோ கிறிஸ்டலைஸ் செல்லுலாஸ் எனும் ரசாயன பவுடர் தயாரிக்கப்பட்டு வருகிறது. 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை 143 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அப்போது, ஆலையில் இருந்த ரியாக்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இந்த விபத்தில் தொழிலாளர்கள் சுமார் 100 மீட்டர் தொலைவுக்கு தூக்கி எறியப்பட்டனர். இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 39 பேர் உயிரிழந்தனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் வருகை தந்த முதல்வர் ரேவந்த் ரெட்டி, விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடனடி நிவாரணமாக, இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 1 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50,000-மும் வழங்க அதிகாரிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டார். இது உடனடி நிவாரணம் மட்டுமே என்றும் இழப்பீடு அல்ல என்றும் அவர் கூறினார். இதனைத் தொடர்ந்து, வெடிவிபத்தில் இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 1 கோடி இழப்பீடு வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட முதல்வர் ஏ.ரேவந்த் ரெட்டி, காயமடைந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டார். மேலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்த தொழிலாளர்களை சந்தித்த முதல்வர், அவர்களின் உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com



வரலாறு உலகம்

## அமெரிக்க தாக்குதலில் சேதமடைந்த நிலத்தடி அணு நிலையத்தை தீவிரமாக சீரமைக்கும் ஈரான்

**ஈரான் : ஜூலை. 2,**

**அணு ஆயுதத்தை ஈரான் தயாரிப்பதாக கூறி அந்நாடு மீது இஸ்ரேல் கடந்த மாதம் 13-ந்தேதி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன.**



இதற்கு பதிலடியாக இஸ்ரேல்மீதுஈரான்தாக்குதல் நடத்தியது. இதற்கிடையே இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானின் போர்டோவில் உள்ள நிலத்தடி அணுசக்தி நிலையம் உள்ள 3 முக்கிய அணு நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் இந்த அணு நிலையங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார். மேலும் ஈரானின் அணுசக்தி திட்டங்கள் 2 ஆண்டுகள் பின்னோக்கி சென்று விட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் அமெரிக்க தாக்குதலில் சேதமடைந்த 3 அணுசக்தி நிலையத்தை பழுதுபார்க்கும் பணியில் ஈரான் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக போர்டோவில் உள்ள நிலத்தடி அணு நிலையத்தை சீரமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதுதொடர்பான செயற்கைக்கோள் படங்கள் வெளியாகி உள்ளன. அதில் போர்டோ நிலத்தடி அணு நிலையம் அமைந்துள்ள மலை பகுதியில் பல பணியாளர்கள் இருப்பதை காட்டுகிறது.

மேலும் மலை முகட்டுக்குக் கீழே பல வாகனங்கள் நிலத்தடி அணுநிலைய வளாகத்துக்கு செல்லும் பாதையில் நிறுத்தப்பட்டிருந்தது. இதன்மூலம் சேதமடைந்த அணு நிலையங்களை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வரும் பணியில் ஈரான் மும்முரமாக உள்ளது.

## இந்தியாவுடன் எல்லை நிர்ணயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயார் – சீனா அறிவிப்பு

**பீஜிங் : ஜூலை. 2,**

**சீனாவில் சமீபத்தில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற இந்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத்சிங், சீன மந்திரி டோங் ஜூனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.**



அப்போது எல்லை பிரச்சினையை தீர்க்கவும், இரு நாட்டு உறவை மேம்படுத்தவும் 4 அம்ச திட்டங்களை ராஜ்நாத்சிங் பரிந்துரைத்தார். இந்த நிலையில் இந்தியாவுடன் எல்லை பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயம் மற்றும் மேலாண்மை தொடர்பாக இந்தியாவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு சீனா எப்போதும் தயாராக உள்ளது. இதன்மூலம் இரு தரப்பும் சேர்ந்து எல்லையில் அமைதியை உறுதிப்படுத்தவும், எல்லைத் தாண்டிய ஒத்துழைப்புகளை ஊக்குவிக்கவும் முடியும். இந்தியா-சீனா சிறப்புப் பிரதிநிதிகளின் 23 சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகும் தீர்வு எட்டப்படாதது குறித்து கேள்வி எழுப்பப்படுகிறது.

சீனா-இந்தியா இடையேயான எல்லைப் பிரச்சினை சிக்கலானது. அதைத் தீர்க்க நேரம் எடுக்கும். இதில் முன்னேற்றம் என்னவென்றால் இரு நாடுகளும் ஏற்கனவே முழுமையான தகவல்தொடர்புக்கான பல்வேறு மட்டங்களில் வழிமுறைகளை நிறுவியுள்ளன. எல்லையில் அமைதியைப் பேண இரு நாடுகளும் ஒரே திசையில் செயல்பட்டு, தொடர்ந்து தொடர்பில் இருக்கும் என்று நம்பிக்கை உள்ளது என்று கூறினார்.

இந்தியா-சீனா இடையே கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இரு தரப்பு உறவுகளில் விரிசல் ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த ஆண்டு இறுதியில் படைகளை விலக்கிக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையொப்பமிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் வந்த ஜெர்மனி மந்திரி – ராணுவ ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என உறுதி

**கீவ் : ஜூலை. 2,**

**உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கும் 2-வது பெரிய நாடு ஜெர்மனி ஆகும்.**



நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது 2022-ம் ஆண்டு ரஷியா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளைத் தாண்டியும் இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவி வழங்குகின்றன. இதன்மூலம் உக்ரைன் தொடர்ந்து போரில் தாக்குப்பிடித்து நிற்கிறது.

அந்த வகையில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்கும் 2-வது பெரிய நாடு ஜெர்மனி. அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி ஜோஹன் வடேபுல் அறிவிக்கப்படாத பயணமாக உக்ரைன் சென்றுள்ளார். அங்கு அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி மற்றும் வெளியுறவு மந்திரி ஆண்ட்ரி சிபிஹாவை சந்தித்து பேசினார். அப்போது ரஷியாவின் தாக்குதலை சமாளிக்க உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## எலான் மஸ்க் கடையை காலி செய்து தென் ஆப்பிரிக்காவிற்கு செல்ல வேண்டியிருக்கும் – டிரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன் : ஜூலை. 2,**

**அமெரிக்க அதிபர் டிரம்ப் கொண்டு வந்துள்ள வரி மற்றும் செலவு மசோதாவுக்கு உலக பணக்காரரான எலான் மஸ்க் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.**



இதற்கிடையே இந்த மசோதா அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டதையடுத்து புதியகட்சியைதொடங்குவேன் என்று எலான் மஸ்க் தெரிவித்தார். இந்நிலையில், எலான் மஸ்க் மீண்டும் தென் ஆப்பிரிக்காவிற்கே செல்ல வேண்டியிருக்கும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து டிரம்ப் தனது சமூக ஊடக பதிவில், “அதிபர் தேர்தலில் எலான் மஸ்க் என்னை தீவிரமாக ஆதரித்தார். ஆனால் EV வாகனங்களுக்கான நுகர்வோர் வரிச் சலுகையை ரத்து செய்ய வேண்டும் என்பதை நீண்ட நாட்களாக நான் கூறி வருகிறேன். இது எலான் மஸ்க்கிற்கும் தெரியும். வரலாற்றில் எந்த மனிதரையும் விட அதிக சலுகைகளை அனுபவிப்பது எலான் மஸ்க்தான். சலுகைகள் மட்டும் இல்லையென்றால் கடையை காலி செய்துவிட்டு தென்னாப்பிரிக்காவுக்கே அவர் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும்” என்று பதிவிட்டுள்ளார்.

## “ஜம்மு காஷ்மீரில் நடப்பது பயங்கரவாதம் அல்ல, சட்டப்பூர்வமான சுதந்திர போராட்டம்” – பாகிஸ்தான் ராணுவ தளபதி

**பாகிஸ்தான் : ஜூலை. 2,**

**ஜம்மு காஷ்மீரில் நடக்கும் பயங்கரவாதம் ஒரு சட்டபூர்வமான போராட்டம் என்று பாகிஸ்தான் ராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் அசிம் முனீர் தெரிவித்துள்ளார்.**



கராச்சியில் உள்ள கடற்படை அகாடமியில் நடந்த விழாவில் பேசிய முனீர் “இந்தியா பயங்கரவாதம் என்று அழைப்பது உண்மையில் ஒரு சட்டபூர்வமான சுதந்திரப் போராட்டமாகும். சர்வதேச சட்டம் அதை அங்கீகரிக்கிறது. காஷ்மீர் மக்களின் விருப்பத்தை நசுக்கி, மோதலைத் தீர்ப்பதற்குப் பதிலாகத் தீவிரப்படுத்தும் முயற்சிகள் இந்த இயக்கத்தை மேலும் முக்கியத்துவப்படுத்த மட்டுமே உதவும்” என்று கூறினார்.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தான் எப்போதும் துணை நிற்கும் என்றும் முனீர் கூறினார். இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்ப்பதன் மூலம் பாகிஸ்தான் தன்னை நிரூபித்துள்ளதாகவும் முனீர் தனது உரையில் கூறினார். புல்வாமா பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு 2019 பாலகோட் தாக்குதலையும், பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு ஆபரேஷன் சிந்தூரையும் முனீர் குறிப்பிட்டார்.

## இந்தியா – அமெரிக்கா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் : வெள்ளை மாளிகை

**வாஷங்டன் : ஜூலை. 2,**

**அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் நல்ல உறவைக் கொண்டுள்ளார் என்றும் இந்தியா - அமெரிக்கா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.**

வெள்ளை மாளிகை பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட், நேற்று முன்தினம் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை அமெரிக்கா எவ்வாறு கருதுகிறது என்ற கேள்விக்கு பதிலளித்த கரோலின் லீவிட், “ஆசிய பசிபிக் பகுதியில் இந்தியா மிகவும் முக்கியமான நட்பு நாடாக உள்ளது. அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் மிகச் சிறந்த உறவைக் கொண்டுள்ளார். அதை அவர் தொடர்ந்து வைத்திருப்பார்” என்று தெரிவித்தார்.




இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் குறித்த ANI-ன் மற்றொரு கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர், “அமெரிக்காவும் இந்தியாவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கு மிக நெருக்கமாக உள்ளன என்று அதிபர் கடந்த வாரம் கூறினார். அது உண்மைதான். நான் எங்கள் வர்த்தக செயலாளரிடம் இது குறித்து இப்போதுதான் பேசினேன். அவர் அதிபருடன் ஓவல் அலுவலகத்தில் இருந்தார். அவர்கள் இந்த ஒப்பந்தங்களை இறுதி செய்யும் பணியில் இருக்கிறார்கள். இது தொடர்பான அறிவிப்பை அதிபரிடம் இருந்தும், அவரது வர்த்தகக் குழுவிடமிருந்தும் மிக விரைவில் நீங்கள் கேட்பீர்கள்.” என்று தெரிவித்தார்.

இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப், “இந்தியாவில் நாங்கள் வர்த்தகம் செய்வதற்கான உரிமையை அளிக்கும் ஒரு ஒப்பந்தத்தை எட்டப் போகிறோம் என்று நினைக்கிறேன். தற்போது, அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் அங்கு செல்ல முடியாது, அதைப் பற்றி யோசிக்கக்கூட முடியாது.

நாங்கள் ஒரு முழுமையான வர்த்தக தடை நீக்கத்தை எதிர்பார்க்கிறோம், இது நினைத்துப் பார்க்க முடியாதது, அது நடக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த நேரத்தில், இந்தியாவுக்குச் சென்று வர்த்தகம் செய்வதை நாங்கள் விரும்புகிறோம்.” என்று தெரிவித்திருந்தார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான காலக்கெடு ஜூலை 9 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னும் 7 நாட்கள் மட்டுமே மீதமுள்ள நிலையில், இரு தரப்பினரும் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய வேலை செய்து வருகின்றனர்.

## வங்கதேசத்தில் இந்து பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை : உள்ளூர் அரசியல்வாதி உட்பட 5 பேர் கைது

**டாக்கா : ஜூலை. 2,**

**வங்கதேசத்தில் இந்து பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்ட வழக்கில் உள்ளூர் அரசியல்வாதி உட்பட 5 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.**

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நீதி வழங்கவும், குற்றவாளிகள் மீது நேரடியாக நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்திடாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் திங்கள்கிழமை மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து குமிலா மாவட்ட காவல் துறை தலைவர் நஸிர் அகமது கான் கூறியதாவது: குமிலா மாவட்டம் முராட்நகரில் நடைபெறும் ஹரி சேவா திருவிழாவை பார்ப்பதற்காக 21 வயது இந்துப் பெண் அவரது பெற்றோர் வீட்டுக்கு குழந்தையுடன் வந்துள்ளார். இவரது கணவர் துபாயில் வேலைபார்த்து வருகிறார்.

கடந்த ஜூன் 26-ம் தேதி ராம்சந்திரபூரைச் சேர்ந்த பெஸோர் அலி (36) என்பவர் அந்த இந்துப் பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார். மேலும், அந்தப் பெண்ணை கொடூரமாக தாக்கி நிர்வாணப்படுத்தியதுடன் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில்



வைரலான பின்பே இந்த சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது.

இதையடுத்து, உள்ளூரைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதியான பெஸோர் அலியை போலீஸார் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டதற்காக மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நஸிர் அகமது கான் தெரிவித்தார்.

இதனிடையே பாதிக்கப்பட்ட சிறுபான்மை இந்துபெண்ணுக்குநீதிவழங்க கோரிடாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் மிகப்பெரிய பேரணியை நடத்தினர். இந்த சம்பவத்தில் தொடர்புடைய அனைவர் மீதும் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுபோராட்டக்காரர்களின் கோரிக்கையாக இருந்தது.

இந்து பெண்ணை நிர்வாணமாக்கி கொடூரமாக சித்ரவதை செய்யும் நபரிடம் அந்த பெண் தன்னை விட்டுவிடும்படி மன்றாடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. இதையடுத்து, அந்த பதிவை உடனடியாக நீக்க வங்கதேச உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தொலைபேசி அழைப்பு கசிவு : தாய்லாந்து பிரதமரை இடைநீக்கம் செய்தது நீதிமன்றம்

**பேங்காக் : ஜூலை. 2,**

**கம்போடிய செனட் தலைவர் ஹன் சென் உடனான தொலைபேசி உரையாடல்கசிந்தவிவகாரம் தொடர்பாக தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவை அந்நாட்டு நீதிமன்றம் இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.**

அண்டை நாடான கம்போடியா எல்லையில் நிலவும் பதட்டங்களைத் தணிக்கும் நோக்கில், அந்நாட்டின் முன்னாள் பிரதமரும் கம்போடிய செனட் தலைவருமான ஹன் சென் உடன், தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா தொலைபேசியில் உரையாடினார். அப்போது, ஹன் சென்னை சமாதானப்படுத்தும் நோக்கில், தங்கள் நாட்டு ராணுவத் தளபதி குறித்து விமர்சித்துப் பேசியுள்ளார். இந்த உரையாடல் அடங்கிய ஆடியோ கசிந்ததை அடுத்து, தாய்லாந்து பிரதமருக்கு எதிராக தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரித்த தாய்லாந்தின் அரசியலமைப்பு நீதிமன்றம், பிரதமர் பேடோங்டார்ன்



ஷினவத்ரா நெறிமுறைகளை மீறியதாகக் குற்றம் சாட்டியது. இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட இருப்பதால், பிரதமரை பதவியில் இருந்து இடைநீக்கம் செய்தும் அரசியலமைப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்துப் பேசிய பேடோங்டார்ன் ஷினவத்ரா, எனது பணி தடைபடுவதை நான் விரும்பவில்லை. இருந்தாலும், நீதிமன்ற உத்தரவை ஏற்றுக்கொள்கிறேன். இந்த உத்தரவால் நான் கவலைப்படுகிறேனா என்று நீங்கள் என்னிடம் கேட்டால், ஆம் நான் கவலைப்படுகிறேன்,” என்று தெரிவித்தார்.

ஆடியோ கசிவை அடுத்து, தாய்லாந்தின் கூட்டணி அரசாங்கத்தில் இருந்து ஒரு பெரிய கட்சியான பூம்ஜைதாய் கட்சி வெளியேறியது. இதையடுத்து, தாய்லாந்து மன்னர் மகா வஜிரலோங்கோர்ன், புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

## காசா மீது இஸ்ரேல் கொடூர தாக்குதல் : உணவு தேடி வந்த சிறுவர்கள், பெண்கள் உள்பட 74 பேர் பலியான சோகம்

**கெய்ரோ : ஜூலை. 2,**

**காசாவில் உள்ள ஓட்டலைத் தாக்கியதுடன், உணவு தேடி வந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 74 பேர் கொல்லப்பட்டனர்.**

ஈரானுடன் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டதால், இஸ்ரேல், தனது கவனத்தை காசா பக்கம் திருப்பி உள்ளது. வடக்கு காசாவில் வசிக்கும் பாலஸ்தீனியர்கள் உடனடியாக மொத்தமாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் ஹமாஸ் இயக்கத்தினர் மீது மிகப்பெரிய தாக்குதலை தொடங்க இருப்பது தெளிவாகிறது.

இந்த பின்னணியில், காசாவில் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அழைப்பு விடுத்திருந்தார். ஹமாஸ் இயக்கத்தினரின் பிடியில் உள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

டிரம்ப் பதவியேற்றவுடன் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 8 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, மீண்டும் சண்டை தொடங்கியது. இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் கொண்டுவர டிரம்ப் மேற்கொள்ளும் முயற்சி வெற்றிபெறவில்லை. இதற்கிடையே, வரும் வாரங்களில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா செல்வார் என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே, போர் நிறுத்த பேச்சுவார்த்தையில்



முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில் காசாவில் இஸ்ரேலிய ராணுவம் உணவகம் மற்றும் உணவு தேடி வந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 74 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக இஸ்ரேலியப் படைகள் காசாவில் கடலோர ஓட்டலில் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 30 பேர் கொல்லப்பட்டனர், மேலும் போரினால் பாதிப்பட்ட பாலஸ்தீனியர்கள், தங்களுக்கு தேவையான உணவு உதவியைப் பெற முயன்றபோது துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர் என்று அங்குள்ள சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

காசா நகரில் உள்ள அல்-பக்காகபேமீதுஒருவான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது, அப்போது அது பெண்கள் மற்றும் குழந்தைகளால் நிரம்பியிருந்தாக கூறப்படுகிறது. மேலும் டஜன் கணக்கானவர்கள் காயமடைந்தனர், பலர் கவலைக்கிடமாக உள்ளனர். குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர் என்று வடக்கு காசாவில் உள்ள சுகாதார அமைச்சகத்தின் அவசர மற்றும் ஆம்புலன்ஸ் சேவையின் தலைவர் பாரெஸ் அவாட் கூறினார். மேலும் அவர் கூறுகையில், “எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், திடீரென்று, ஒரு போர் விமானம் அந்த இடத்தைத் தாக்கியது, நிலநடுக்கம் போல அதை உலுக்கியது” என்று,” என்று பாரெஸ் அவாட் தெரிவித்தார்.

## டிரம்பை நேசிக்கிறோம் – பாலஸ்தீனிய மக்கள் கோஷம்

**வாஷிங்டன் டி.சி. : ஜூலை. 2,**

**காசாவில் ஒப்பந்தம் ஏற்படுத்துவோம். பணய கைதிகளை மீட்டு கொண்டு வருவோம் என டிரம்ப் பதிவு தெரிவிக்கின்றது.**

காசா பகுதியில் ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், 53 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்து 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

எனினும், நாங்கள் பயங்கரவாதிகளையே இலக்காக கொண்டு தாக்குதல் நடத்துகிறோம் என இஸ்ரேல் கூறுவதுடன், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் அவர்கள் (ஹமாஸ் அமைப்பினர்) செயல்படுகின்றனர் என்றும் அதனால், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஈரான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளால்,



பல சந்தர்ப்பங்கள் திறந்துள்ளன என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறினார். இதனால், மீதமுள்ள பணய கைதிகளை சொந்த நாட்டுக்கு அழைத்து வரும் சாத்தியம் அதிகரித்து உள்ளது என்றும் கூறினார். எனினும், போரை இஸ்ரேல் நிறுத்தும்படி பணய கைதிகளின் உறவினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்காக ஒரு விரிவான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி, 50 பணய கைதிகளையும் திரும்ப அழைத்து, காசாவில் போரை முடிவுக்கு கொண்டு வேர வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த சூழலில், அமெரிக்க ஆதரவு பெற்ற நிவாரண உதவி பொருட்கள் காசாவுக்குள் கொண்டு செல்லப்பட்டன. இதுபற்றிய வீடியோ ஒன்றை வெள்ளை மாளிகையின் ஊடக செய்தி தொடர்பாளரான கரோலின் லீவிட் பகிர்ந்து உள்ளார். அதில் பாலஸ்தீனிய மக்கள் டிரம்பை நாங்கள் நேசிக்கிறோம். டொனால்டை நேசிக்கிறோம் என கோஷங்களை எழுப்பினர்.

இதே போன்று டிரம்ப் வெளியிட்ட பதிவு ஒன்றையும் லீவிட் பகிர்ந்து உள்ளார். அதில், காசாவில் ஒப்பந்தம் ஏற்படுத்துவோம். பணய கைதிகளை மீட்டு கொண்டு வருவோம் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதனால் ஹமாஸ் அமைப்பினரிடம் சிக்கியுள்ள பணய கைதிகள் மீட்கப்படும் சாத்தியம் அதிகரித்து காணப்படுகிறது.

வரலாறு விளையாட்டு

# யுஎஸ் ஓபனில் ஆயுஷ் சாம்பியன்




**அயோவா : ஜூலை. 2,**

**அமெரிக்காவின் அயோவா நகரில் யுஎஸ் ஓபன் பாட்மிண்டன் தொடர் நடைபெற்றது. இதன் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் வளர்ந்து வரும் நட்சத்திர மான இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, போட்டித் தரவரிசையில் 3-வது இடத்தில் உள்ள கனடாவின் பிரையன் யங்குடன் மோதினார்.**

47 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி 21-18, 21-13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் 16 வயதான தன்வி சர்மா, போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவின் பெய்வென் ஜாங்குடன் மோதினார். 46 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தன்வி சர்மா 11-21, 21-16, 10-21 என்ற செட் கணக்கில் போராடி தோல்வி அடைந்தார்.

# 'இந்தியாவில் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும்' – நேதன் லயன் ஆசை



**செயின்ட் ஜார்ஜ் : ஜூலை. 2,**

**இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான நேதன் லயன் தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.**

37 வயதான அவர், ஆஸ்திரேலிய அணிக்காக 138 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 556 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். இந்திய அணிக்கு எதிரான உள்நாடு மற்றும் வெளிநாடு என 32 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 130 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். இருப்பினும் இந்திய மண்ணில் அவர் இடம்பெற்ற ஆஸ்திரேலிய அணி இதுவரை டெஸ்ட் தொடரை வென்றதில்லை.

கடைசியாக கடந்த 2004-05 இந்திய சுற்றுப்பயணத்தில் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி வென்றது. அந்த தொடரின் முதல் 3 போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியை ஆடம் கில்கிறிஸ்ட் வழிநடத்தி இருந்தார். ரிக்கி பாண்டிங் காயம் காரணமாக முதல் மூன்று போட்டிகளில் விளையாடவில்லை. இந்நிலையில், அந்தத் தொடரின் முதல் மற்றும் மூன்றாவது போட்டியை ஆஸ்திரேலியா வென்றது. நான்காவது போட்டியில் இந்தியா வென்றது. இரண்டாவது போட்டி டிரா ஆனது.

"இந்தியா மற்றும் இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டுமென நான் எப்போதும் சொல்வது உண்டு. அடுத்த இரண்டு வருடங்களில் அந்த வாய்ப்பு கிடைக்கலாம். ஆனால், அதை ஒவ்வொரு டெஸ்ட் போட்டியாக அணுக வேண்டியது அவசியம். இப்போது மேற்கு இந்தியத் தீவுகளில் நாங்கள் எங்கள் பணியை சரியாக செய்ய வேண்டும்.

இதன் பின்னர் கோடை காலத்தில் சொந்த மண்ணில் ஆஷஸ் தொடரில் விளையாட உள்ளோம். நிச்சயம் மற்றுமொரு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் நான் விளையாடுவேன் என நம்புகிறேன்" என லயன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் ஒவ்வொரு வெற்றிக்கு பிறகும் 'Underneath The Southern Cross' என்ற பாடலை பாடுவது வழக்கம். அதை அணியில் உள்ள வீரர் ஒருவர் லீட் செய்வார். ரோட் மார்ஷ் தொடங்கி வைத்த இந்த வழக்கத்தை லயன் வசம் மைக் ஹஸ்ஸி தனது ஓய்வின் போது கொடுத்தார். இந்த கொண்டாட்ட பாடலை 67 வெற்றிகளில் லயன் லீட் செய்துள்ளார். இப்போது அந்த பாடலை லீட் செய்யும் பணியை விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி வசம் கொடுத்துள்ளார் லயன்.

கடந்த வாரம் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி வெற்றிக்கு பிறகு அந்த கொண்டாட்ட பாடலை பாட கேரி தலைமை வகித்தார். "அந்த பாடல் இனி நான் அணியில் ஒருவனாக இருந்து வெற்றி கொண்டாட்டத்தை ரசிப்பேன். இப்போதைக்கு நான் ஓய்வு பெறுகின்ற முடிவில் இல்லை என்பதை தெளிவுபடுத்திக் கொள்கிறேன். எனது பணியை அணி வீரரின் வசம் ஒப்படைத்துள்ளேன். அவ்வளவுதான்" என லயன் கூறியுள்ளார். இதற்கு முன்பு 2023 ஆஷஸ் தொடரில் லயன் காயமடைந்த போது கொண்டாட்ட பாடலை பாடும் பொறுப்பை கேரி வசம் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை மாவட்ட சப்–ஜூனியர் கால்பந்து அணிக்கு வீரர், வீராங்கனைகள் தேர்வு



**சென்னை : ஜூலை. 2,**

**சென்னை மாவட்ட சப்-ஜூனியர் ஆடவர் அணிக்கான வீரர்கள் தேர்வு வரும் 3-ம் தேதி (நாளை) முதல் 5-ம் தேதி வரை சென்னை பெரம்பூரில் உள்ள டான் போஸ்கோ உயர்நிலை பள்ளியில் நடைபெறுகிறது. இதேபோன்று சென்னை மாவட்ட சப்-ஜூனியர் மகளிர் அணிக்கான வீராங்னைகள் தேர்வு வரும் 4 மற்றும் 5-ம் தேதிகளில் பெரியமேட்டில் உள்ள கண்ணப்பர் திடலில் நடைபெறுகிறது.**

இதில் 2012 மற்றும் 2013-ம் ஆண்டு பிறந்தவர்கள் கலந்து கொள்ளலாம். தேர்வில் கலந்து கொள்பவர்கள் பிறப்பு சான்றிதழ். ஆதார் அட்டை, இருப்பிட சான்று ஆகியவற்றை நேரில் கொண்டு செல்ல வேண்டும்.

இதில் தேர்வு செய்யப்படுவர்கள் மாநில சாம்பியன்ஷிப் போட்டியில் சென்னை மாவட்ட கால்பந்து சங்கம் சார்பில் பங்கேற்பார்கள். இந்தத் தொடரின் வாயிலாக வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் சப்-ஜூனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிக்கு வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

# இந்தியா உடனான 2–வது டெஸ்ட் : ஆடும் லெவனை அறிவித்த இங்கிலாந்து – பும்ரா விளையாடுகிறாரா?



**பர்மிங்ஹாம் : ஜூலை. 2,**

**இந்திய அணி உடனான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான ஆடும் லெவனை அறிவித்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் அணி. இந்தப் போட்டியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா விளையாடுவாரா என்ற சஸ்பென்ஸ் தொடர்ந்து வருகிறது.**

'ஆண்டர்சன் சச்சின் டிராபி' டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஷுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 1-0 என இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில், இன்று இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் இந்த தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற உள்ளது. இந்தப் போட்டிக்கான ஆடும் லெவனை இங்கிலாந்து அணி அறிவித்துள்ளது.

இங்கிலாந்து ஆடும் லெவன்: ஸாக் கிராவ்லி, பென் டக்கெட், ஆலி போப், ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), ஜேமி ஸ்மித் (விக்கெட் கீப்பர்), கிறிஸ் வோக்ஸ், பிரைடன் கார்ஸ், ஜோஷ் டங், ஷோயப் பஷீர்.

இந்தப் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜோஃப்ரா ஆர்ச்சர் இடம்பெற்றிருந்தார். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு பிறகு அவர் டெஸ்ட் அணியில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஆடும் லெவனில் அவர் இடம்பெறவில்லை.

பர்மிங்ஹாம் டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர் பும்ரா விளையாடுகிறாரா என்பது இதுவரை சஸ்பென்ஸாகவே உள்ளது. அவர் இந்த தொடரில் 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் என ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. ஆனால், அது எந்தப் போட்டி என தெரிவிக்கப்படவில்லை. முதல் போட்டியில் அவர் விளையாடி இருந்தார். அதனால் எஞ்சியுள்ள 4 போட்டிகளில் இன்னும் இரண்டில் தான் அவர் விளையாடுவார்.

அவருக்கு வொர்க் லோடை குறைக்கும் நோக்கில் இந்த விலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய அணி இந்த தொடரில் பின்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பும்ரா விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்பு கூடியுள்ளது. அவர் விளையாடாத பட்சத்தில் இந்திய அணி இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் இந்தப் போட்டியில் விளையாடும் என தகவல்.

# கேப்டன் கூல் அடைமொழிக்கு வர்த்தக முத்திரை கோரி தோனி விண்ணப்பம்



**மும்பை : ஜூலை. 2,**

**போட்டியை முடிப்பதில், தலைவர் மற்றும் விக்கெட்கீப்பராக சிறந்த முறையில் செயல்படுபவர் தோனி என ஐ.சி.சி. அவருக்கு பாராட்டு தெரிவித்து உள்ளது.**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் தோனி ரசிகர்களால் அன்புடன் கேப்டன் கூல் என அழைக்கப்படுகிறார். அவருக்கு இந்தியா மட்டுமின்றி உலக அளவில் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். இந்நிலையில், வர்த்தக முத்திரை பதிவுக்கான வலைதளத்தில், கேப்டன் கூல் என்ற அடைமொழியை அவர் பதிவு செய்து அதற்காக விண்ணப்பித்து உள்ளார். அவருடைய இந்த கோரிக்கை ஏற்கப்பட்டு விட்டது என அந்த வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதற்காக கடந்த 5-ந்தேதி தோனி சார்பில் விண்ணப்பம் அனுப்பப்பட்டு உள்ளது. இதற்கான பதிவு பற்றிய அதிகாரப்பூர்வ தகவல் கடந்த 16-ந்தேதி வெளியிடப்பட்டு உள்ளது.

விளையாட்டுக்கான பயிற்சி, விளையாட்டு பயிற்சிக்கான வசதிகள் வழங்குதல், விளையாட்டு பயிற்சி மற்றும் சேவைகள் ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த பதிவு செய்யப்பட்டு உள்ளது. எனினும், இதுபற்றி தோனி உடனடியாக எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. 2025-ம் ஆண்டுக்கான ஐ.சி.சி.யின் ஹால் ஆப் பேமில், இந்த மாத தொடக்கத்தில் தோனியின் பெயர் சேர்க்கப்பட்டு உள்ளது.

போட்டியை முடிப்பதில், தலைவர் மற்றும் விக்கெட்கீப்பராக சிறந்த முறையில் செயல்படுபவர் தோனி என ஐ.சி.சி. அவருக்கு பாராட்டு தெரிவித்து உள்ளது. நெருக்கடியான சூழலிலும் அமைதி காப்பதற்காக கொண்டாடப்படுபவர். ஈடு இணையற்ற ராஜதந்திரங்களை கையாள்பவர் என்றும் புகழாரம் சூட்டியிருக்கிறது.

வரலாறு சினிமா

# நல்ல படத்தின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது : இயக்குநர் கே.பாக்யராஜ்



**சென்னை : ஜூலை. 2,**

**நல்ல படம் எடுத்தால் அது கண்டிப்பாக வெற்றி பெறும். அதன் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது என்று இயக்குநர் கே.பாக்யராஜ் பேசினார்.**

அரசகுமார் தயாரிப்பில் உருவாகி இருக்கும் படம் 'கயிலன்'. அருள் அஜித் இயக்கியுள்ள இப்படத்தில் ஷிவா, ரம்யா பாண்டியன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இதன் முன்னோட்டம் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினருடன் தயாரிப்பாளர் கே.ராஜன், இயக்குநர் கே.பாக்யராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த விழாவில் இயக்குநர் கே.பாக்யராஜ் பேசும்போது, "கே ராஜன் பேசும்போது தமிழில் பெயர் வைப்பதை பற்றி குறிப்பிட்டார். அதைக் கேட்டவுடன் என்னுடைய படங்களை பற்றி யோசித்தேன். அதில் ஒரு படத்திற்கு 'டார்லிங் டார்லிங் டார்லிங் ' என்று பெயர் வைத்திருந்தேன். அதன் பிறகு ஒரு படத்தில் 'டாடி டாடி' என்று பாடலையும் வைத்திருந்தேன். அத்துடன் 'பேட்டா பேட்டா மேரா பேட்டா' என இந்தியில் தொடங்கும் பாடலையும் வைத்திருந்தேன். இதெல்லாம் ஏன் என்றால் சினிமா மக்களுக்கானது. மக்களுக்கு பிடித்தமானதை செய்ய வேண்டும் என்ற நோக்கம்தான். அதை தவிர்த்து தமிழுக்கு எதிராக செயல்பட வேண்டும் என்பது நோக்கம் அல்ல. எங்களுக்கு தமிழ் தான் சோறு போடுகிறது.

நல்ல படம் எடுத்தால் அது கண்டிப்பாக வெற்றி பெறும். அந்த வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. இதற்கு சிறந்த உதாரணம் 'டூரிஸ்ட் ஃபேமிலி'. இந்தப் படத்தின் இயக்குநரை மனதார பாராட்டுகிறேன்.

இந்தப் படத்தின் பெயர் 'கயிலன்' என்று சொன்னவுடன் மீண்டும் ஒருமுறை தமிழைப் படிக்க வேண்டும் என்று தோன்றியது. அதன் பிறகு இயக்குநர் 'கயிலன்' பெயருக்கான பொருளை சொன்னார். இந்தப் படத்தின் முன்னோட்டத்தை எனக்கு அனுப்பினார்கள். அதனை பார்த்தேன். இதன் சாராம்சம் என்னவென்றால் போராட்டம் தான்.

போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. என்னுடைய குருநாதருடன் இணைந்து பணியாற்றிய முதல் படத்தில் பெரும் போராட்டம் இருந்தது. அவருடைய 'மயிலு' என்ற கதையை வைத்துக்கொண்டு ஏறாத கம்பெனிகளே இல்லை. அந்தப் படத்தின் படப்பிடிப்பும் திட்டமிட்டபடி தொடங்கவில்லை.

கமல்ஹாசனின் கால்ஷீட் இல்லை. அதன் பிறகு தயாரிப்பாளர் எங்களுக்கு நம்பிக்கை அளித்தார். பெரும் போராட்டத்திற்கு பிறகு வெளியான '16 வயதினிலே 'படம் பெரும் வெற்றியை பெற்றது. இரண்டாவது படமான 'கிழக்கே போகும் ரயில்' படத்திலும் போராட்டம் இருந்தது. அதையெல்லாம் எதிர்கொண்டு தான் வெற்றி பெற்றோம்.

இயக்குநர் பாலச்சந்தர் இரண்டு படங்களை இயக்கிய பிறகு தான் அவர் தன்னுடைய அரசாங்க வேலையைவிட்டார். ஆனால் இந்தப் படத்தின் இயக்குநர் வேலையை திடீரென்று வேண்டாம் என்று சொல்லிவிட்டு சினிமாவில் இயக்குநராகி இருக்கிறார். கணவரின் விருப்பத்தை அறிந்து அதற்கு ஆதரவு அளித்த அவரது மனைவி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு நன்றி சொல்கிறேன்' என்றார்.

# விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் டேனியல் மேத்வதேவ் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி



**லண்டன் : ஜூலை. 2,**

**கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் மிகவும் புகழ் வாய்ந்த விம்பிள்டன் தொடர் லண்டனில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை தொடங்கியது. ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 12-ம் நிலை வீரரான அமெரிக்காவின் பிரான்சிஸ் தியாஃபோ, 117-ம் நிலை வீரரான டென்மார்க்கின் எல்மர் மோலரை எதிர்த்து விளையாடினார். இதில் தியாஃபோ 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.**

9-ம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவ், 6-ம் நிலை வீரரான பிரான்சின் பெஞ்சமின் போன்சியுடன் மோதினார். 3 மணி நேரம் 7 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பெஞ்சமின் போன்சி 7-6(7-2). 3-6, 7-6(7-3), 6-2 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி அளிக்கும் வகையில் டேனியல் மேத்வதேவை வீழ்த்தினார்.

24-ம் நிலை வீரரான அர்ஜெண்டினாவின் ஸ்டீபனோஸ் சிட்சிபாஸ், 113-ம் நிலை வீரரான பிரான்ஸின் வாலண்டைன் ராயருடன் மோதினார். இதில் சிட்சிபாஸ் 3-6, 2-6 என்ற செட் கணக்கில் பின்தங்கியிருந்த நிலையில் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகினார். இதனால் வாலண்டைன் ராயர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் முதல் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா, 194-ம் நிலை வீராங்கனையான கனடாவின் கார்சன் பிரான்ஸ்டைனுடன் மோதினார். இதில் அரினா சபலெங்கா 6-1, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். 14-ம் நிலை வீராங்கனையான உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினா 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் 75-ம் நிலை வீராங்கனையான ஹங்கேரியின் அனா போன்டரை தோற்கடித்தார்.

20-ம் நிலை வீராங்கனையான ஜெலினா ஒஸ்டபென்கோ 5-7, 6-2, 2-6 என்ற செட் கணக்கில் 51-ம் நிலை வீராங்கனையான இங்கிலாந்தின் சோனே கர்தாவிடம் தோல்வி அடைந்தார். இரு முறை விம்பிள்டனில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்த துனிசியாவின் ஜபூர், பல் கேரியாவின் விக்டோரியா டோமோவாவுடன் மோதினார். இதில் ஜபூர் 6-7 (5-7). 0-2 என பின்தங்கிய நிலையில் இருந்த நிலையில் திடீரென போட்டியில் இருந்து விலகினார். இதில் விக்டோரியா டோமோவா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# 'கண்ணப்பா' படத்துக்கு கிடைத்த வரவேற்பால் மகிழ்ச்சி : மோகன்பாபு உற்சாகம்



**சென்னை : ஜூலை. 2,**

**'கண்ணப்பா' படத்திற்கு மக்களிடம் கிடைத்திருக்கும் வரவேற்பு மகிழ்ச்சியளிக்கிறது என்று மோகன் பாபு தெரிவித்துள்ளார்.**

மோகன் பாபு தயாரிப்பில் விஷ்ணு மஞ்சு, பிரபாஸ், அக்ஷய்குமார், மோகன்லால், சரத்குமார், காஜல் அகர்வால் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'கண்ணப்பா'. இதுவரை உலகளவில் 60 கோடி வசூலை கடந்திருக்கிறது. இப்படத்தினை முகேஷ் குமார் சிங் இயக்கியுள்ளார். இதன் சிறப்பு காட்சி திரையிடல் சென்னையில் நடைபெற்றது. இதில் மோகன் பாபு கலந்து கொண்டார்.

இந்த சிறப்புக் காட்சியில் இயக்குநர்கள் பி.வாசு, பொன்ராம், இயக்குநர் பிரபுதேவா, ராதிகா சரத்குமார், ஏ.சி.சண்முகம், ஒய்.ஜி.மகேந்திரன், நடிகர் தியாகராஜன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டார்கள். இப்படம் முடிவடைந்த உடன் அனைவருமே மோகன் பாபுவை வெகுவாக பாராட்டினார்கள்.

இந்த வரவேற்பு குறித்து மோகன் பாபு, "நான் கஷ்டப்படும் காலங்களில் சோறு, தங்க இருப்பிடம் கொடுத்தது தமிழ்நாடு தான். என் மூன்று பிள்ளைகளும் இங்கு தான் பிறந்தார்கள். விஷ்ணு மஞ்சுவை ராதிகாவுக்கு சிறுவயதில் இருந்தே தெரியும், அவர் போல்டான டஃப்பான லேடி. என்னுடன் நிறைய படங்களில் நடித்திருக்கிறார்.

சரத்குமாரின் 'நாட்டாமை' படத்தை தான் 'பெத்தராயுடு' என்று தெலுங்கில் எடுத்தேன். கடந்த மூன்று வருடங்களாக நானும் சரத்குமாரும் மிக நெருக்கமாக சகோதரர்களை போல் பழகி வருகிறோம். பிரபுதேவா என் தம்பி போல், அவர் எனக்காக இந்த படத்தில் பணியாற்றினார். 'கண்ணப்பா' படத்திற்கு மக்களிடம் கிடைத்திருக்கும் வரவேற்பு மகிழ்ச்சியளிக்கிறது. அதிகமான பொருட்செலவில் மிக பிரம்மாண்டமாக தயாரித்திருந்தாலும், கண்ணப்பாவாக மக்கள் மனதில் நின்றிருக்கும் விஷ்ணு மஞ்சு இதற்காக கடினமாக உழைத்தார், அவரது உழைப்புக்கு கிடைத்த பலன்தான் இந்த வெற்றி. ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி." என்றார்.

# விஜய் சேதுபதி பூரி ஜெகந்நாத் பட பணிகள் பூஜையுடன் தொடக்கம்



**சென்னை : ஜூலை. 2,**

**விஜய் சேதுபதி பூரி ஜெகந்நாத் இணையும் படத்தின் பணிகள் பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது.**

'ட்ரெயின்' படத்தினைத் தொடர்ந்து பூரி ஜெகந்நாத் இயக்கவுள்ள படத்துக்கு தேதிகள் ஒதுக்கியிருக்கிறார் விஜய் சேதுபதி. இதனை பூரி கனெக்ட்ஸ் நிறுவனம் மற்றும் ஜேபி மோஷன் பிக்சர்ஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கவுள்ளன. இதன் பணிகள் பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் படப்பிடிப்பு தொடங்க படக்குழு ஆயத்தமாகி இருக்கிறது.

இதில் தபு, சம்யுக்தா, விஜய்குமார் உள்ளிட்ட பலர் விஜய் சேதுபதி உடன் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதன் முன் தயாரிப்பு பணிகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில், விரைவில் படப்பிடிப்பு தொடங்க உள்ளது. இதன் கதையிலிருந்து ஒவ்வொரு விவரத்தையும் மிக நுணுக்கமாக வடிவமைத்து வருகிறார் பூரி ஜெகந்நாத். பான் இந்தியா படமாக பெரும் பொருட்செலவில் இப்படம் தயாராக உள்ளது.

பூரி ஜெகந்நாத் படத்தை முடித்துவிட்டு, தனது அடுத்த படத்தை இன்னும் அதிகாரபூர்வமாக முடிவு செய்யவில்லை. ஆனால், 'மகாராஜா' இயக்குநர் நித்திலன் இயக்கத்தில் நடிக்க திட்டமிட்டு இருக்கிறார். இது தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கி நடைபெற்று வருகிறது.

# அஜித்குமார் கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி முதல்வர் ஸ்டாலின் உத்தரவு





# மின்கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும் : அன்புமணி வலியுறுத்தல்

# ஜிஎஸ்டியால் 8 ஆண்டுகளில் 18 லட்சம் நிறுவனங்கள் மூடல் : ராகுல் காந்தி




சென்னை / புதுக்கோட்டை | 02.07.2025 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை


வரலாறு

நாளிதழ்




# இன்றைய பிறந்த நாள்

க. கணபதிப்பிள்ளை , இலங்கைத் தமிழறிஞர், பேராசிரியர் (பி.1903)



டி. வி. தாமஸ் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1910)



இராசமனோகரி புலேந்திரன் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1949)




மயில்சாமி அண்ணாதுரை , தமிழகப் பொறியலாளர், விண்வெளி ஆய்வாளர் (பி.1958)




# இன்றைய நினைவு நாள்


சேத் பார்னசு நிக்கல்சன் , அமெரிக்க வானியலாளர் (இ.1963)



டக்லஸ் எங்கல்பர்ட் , கணினிச் சுட்டியைக் கண்டுபிடித்தவர் (இ.2013)



எலீ வீசல் , இனவழிப்பில் இருந்து தப்பியவர், செயற்பாட்டாளர் (இ.2016)



ஏர்னெஸ்ட் ஹெமிங்வே , நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ.1961)

